உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௫ { பிரமாதி, ஆடி } மலர் ௪

| | | |
|---|---|---|
| க. | நீத்தார் யார்? | 125 |
| | திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M.A., B.L. | |
| உ. | சதுர்வேதி மங்கலம் | 129 |
| | திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் | |
| ௩. | கலைகளும் வித்தைகளும் | 131 |
| | திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள் B.A. (Lond.) | |
| ௪. | நாட்டு முன்னேற்றம் | 140 |
| | திரு. இ. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் | |
| ௫. | பிராட்டிக்கிராவணன் தோட்டபழியுண்டா? | 154 |
| | திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் | |
| ௬. | தமிழ்ச் செய்திகள் | 158 |
| எ. | மதிப்புரை | 159 |
| அ. | சுந்தரமூர்த்தி, சேரமான் நாயனார் திருநாள் | 160 |
| ௯. | நன்கொடைகள் | |
| ௰. | புகையிலை வரி—அரசாங்க அறிவிப்பு (சேர்க்கை) | |
| | பொழிற்றொண்டர் | |

செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை, தஞ்சை.

௨

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫ | பிரமாதி, ஆடி | மலர் ௪

## நீத்தார் யார்?

திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A.,B.L., பசுமலை.

குறட்பாயிரம் மூன்றும் அதிகாரம் நீத்தார் பெருமை கூறுகிறது. இதிற் கூறப்பெறும் நீத்தார் யார்? அவர் பெருமை கூறுவது நூல் உட்பகுதியாகாமல் பாயிரத்துள் வருமாறென்னை? இன்னோரன்ன சில வினாக்கள் எழுவது இயல்பு. இவைகளுக்கு அமைதி தரும் விடை காணாமல் பாயிர அதிகாரம் நாலுமே வள்ளுவருக்குப் பிற்காலத்தில் இயற்றப்பெற்று வள்ளுவர் நூலில் செருகப்பெற்றன எனத் துணிந்து கூறுவாருமுளர். அத்துணிவுக்கு அவர் கூறும் பல ஏதுக்களுள் ஒன்று, மற்றைய சங்க நூல்களில் அவ்வந்நூல் ஆக்கியோர் கடவுள் வாழ்த்து முதலிய பாயிரம் தாமேயியற்றக் காணப்பெறாமையால் சங்க காலப் புலவரான வள்ளுவரும் அவ்வாறு செய்திருக்கமாட்டார் என்பது. மற்றொன்று, வள்ளுவரே பின், நூலுள் துறவைத் தனியதிகாரமாக்கி விளக்குவாராதலின் பாயிரத்துள் தீரத் துறந்தார் பெற்றியைக் குறிப்பதே மிகையாகும்; அதை ஓர் அதிகாரமுமாக்கிப் பலபட விரித்து மீட்டும் அதையே நூலுள்ளும் கூறுவது, கூறியது கூறலென்னும் குற்றத்துக்கு அவரையாட்படுத்தும். அவர் அத்தகைய தவறியற்றக்கூடாதவராகையால் நீத்தார்பெருமை அவர் கூறியிரார் என்பது. எனவே, இவ்வாறு வினவுவாரைச் சினவாமல் அவர் ஐயங்களை அமைதி தரும் விடை தந்து அகற்ற முயலுவது முறையாகும்.

இவற்றிற்கு ஐயமறுத்து அமைதிதரும் முடிந்த விடைகள் துணிந்து கூறுவது அருமையாகும். எனினும் இதுபற்றித் தோன்றுஞ் சில கருத்துக்களை, இவற்றையாராய்வார் உடன்

கொண்டு சிந்திக்குமாறு இங்கு தர விரும்புகிறேன். முதலில் வள்ளுவர் குறள் அனைவருக்கு மொத்தியையும் அறமாகும், "இதற்குரியா ரல்லாதார்இல்" புறத்துறைப்பின் ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் அஞ்சி மறைக்கும் நான்மறைகள் ஒரு வகுப்பார்க்கன்றி உதவாவாம். அதனால் தமிழ்க்குறள் கூறும் ஒழுக்க முறைகள் எல்லார்க்கும் விலக்கின்றியியையும் அறங்களேயாதல்வேண்டும். பிறப்பாற் குலம் வகுத்துக் குலம் தோறும் முறைவேறாய் அறவோர்கூறும் ஆரியநூல் விதிக்கும் வருண ஆச்சிரமங்களை எல்லார்க்கும் நடுநிலையி லொத்த அற முரைக்கின்ற தலைசிறந்த வள்ளுவரின் தமிழ்நூலுள் புகுத்திப் பொருள்காணும் முயற்சி பெருந் தவறாகும். இரு பிறப்பாள ரல்லாதார் யார்க்கும் ஆச்சிரம உரிமைகள் அனைத்தையும் ஆரியர் நூல்கள் மறுக்கின்றன. அவற்றின்படி வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்கள் முதல் மூவருணத்தார்க்கே உரியவாம். மற்றவர் கையாள முயல்வது மறுமையில் நிரயத்துப் புகுத்தும் பாவமாவதுடன் இம்மையில் இறைவனால் உயிர்செகுத்தொறுத்தற்குரிய கொடுங்குற்றமுமாகும். தமிழருள் எனைத்து வேறுபாடுமின்றி எல்லாரும் இல்லறமும் துறவறமும் விரும்பியாங்கு ஏற்றற்குரியர். இவ்வுண்மையை மறவாமல் கடைப்பிடித்து வள்ளுவர் குறள்களை ஆராய்தல் முதற் கடனாகும்.

அறனிழுக்கா அன்பொழுக்கம் இல்வாழ்க்கை; பற்றறத் தீபத்துறத்தல் துறவாகும். துவரத் துறவாமல் மனைவியும் சுற்றமும் மருவிய வாழ்க்கை மற்றெதுவாயினும் துறவெனக் கூறல் தமிழ் மரபன்று. நீத்தார் பெருமைத் திறம் விளக்குதற்குக் கோதமன் கதை சிறந்த எடுத்துக் காட்டாகக் கூறப் படுகின்றது. "ஐந்தவித்தானாற்றல் அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி" என்பது இதுபற்றிய குறளாகும். இதிற் குறிக்கப்படும் வரலாறு கோதமன் தன் காதல் மனையாளை விரும்பிய தேவர்கோனை வெகுண்டு இறவாப்பழி சுமக்குமாறு அவனை யொறுத்த செய்தியாகும். கோதமன் துவரத் துறவாமல், அழகிற் சிறந்த அகலிகையுடன் வாழ்ந்ததுமட்டுமன்றி அவளழகைக் காமுற்ற அமரர்க் கரசனையும் வெகுண்டொறுக்கும் காதல்மறச் செற்றம்விடா வுளத்தனுமாதல் யாவரு மறிந்த செய்தி. முற்றுந் துறந்தார் செய்தியெதுவும் காட்ட முயலாமல் மனையறம் பேணிய கோதமன் கதையொன்றே கூறி இதில் நீத்தார் பெருமை விளக்கப்படுதலால் இங்கு நீத்தாரெனப் படுவார் அறத்துறந்தாராகாரென்பது துணியக்கிடக்

கின்றது. இனி, இல்வாழ்வார் நீத்தாரெனப்படுமோ றுளரோ என்றாராய்வதும் அமைவுடைத்தாம். துறந்தார், துவ்வாதார், இறந்தார் எனுமியல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணையாம் அறமேற்கொள்பவர் இல்வாழ்வார்தாம். இப்பேரறம் பேணுதல் விரும்பித் தலையாய தாளாண்மை மேற்கொள்ளு தலால் இல்வாழ்வார் 'நோற்பாரின் நோன்மையுடையார்' எனப்படுவர். பிறர்க்கென முயலும் இந் நோன்றாளுடையார் தனக்கெனவாழா மனத்தியல்புடையராவர். எனவே தன் னலம் நீத்தல் இவர்க்குத் தலையறமாகும். அதனால் பிறர்க் குரியாளராய் ஆற்றினொழுக்கி அறனிழுக்கா இல்வாழ்வாரினும் நீத்தார் பெருமை நிரம்பியாரை நினைத்தலரிதாம். இப்பரிசால் பாயிர அதிகாரம் பாராட்டும் நீத்தார் தன்னலந்துறந்து அறத் தாற்றின் இல்வாழ்க்கையாற்றும் பெரியாரெனக் கொள்ளுதல் எவ்வித தடைகளுக்கு மிடனின்றிப் பொருந்துமெனத்தோற்று கிறது.

இனி, பாயிரக் குறள்களெல்லாம் வள்ளுவரால் இயற்றப் படவில்லையென்பார்தம் கூற்றுக்கு இவ்வாறு பாயிரங்கூறும் மரபு சங்கநூலெனக் கொள்ளப்படும் மற்றைய பண்டை நூல் களில் காணாமையும், அறநூற்பாயிரமாதற்குக் குறட்பாயிர அதிகாரங்கள் பொருந்தாமையுமே காரணங்களாகக் காட்டப் படுகின்றன. செய்யுள் நடைத்திட்பம், செம்பொருட் செறிவின் செவ்வி முதலிய சிறப்பியல்புகளில் பாயிரக் குறள்களுக்கும் வள்ளுவர் நூலுட் குறள்களுக்கும் எனைத்தளவும் வேற்றுமை யின்மையும் நூலாக்கியவர் பாயிரப் பகுதியையும் இயற்றவில்லை யென்பதற்கு அகச் சான்றெதுவும் காணப்படாமையும், நத்தத்தனார், சிறுமேதாவியார், எறிச்சலூர் மலாடனார், தொடித் தலைவிழுத்தண்டினார் முதலிய பண்டைப் புலவரெல்லாம் பாயிரக் குறள்களை நூற்குறள்களுடன் சேர்த்தெண்ணி வள்ளுவரியற் றியனவாகவே கொண்டு தொன்றுதொட்டுக் கூறிவருதலும் முற்றும் முரணுவதால் அத்தகைய ஐயங்களுக் கிடமின்மை தெளிதலெளிது.

இனி, கடவுள் வாழ்த்து முதலிய பாயிரமெதுவும் கூறும் மரபு பழங்காலத்து இல்லையென ஒருதலையாத் துணிதற்குப் போதிய ஏதின்மையும் கருதத்தக்கது. இப்போது சங்க நூலெனப்படுபவை யெல்லாம் தனிப்பெருநூல்களாகாமல் பல புலவர் வெவ்வேறு பொருள்பற்றிப் பல்வேறு காலங்களில் இயற்றிய பாக்களுட் சிலவற்றை அவர் காலத்துக்குப் பின்

பிறர் திரட்டிய தொகைகளேயாதலால் அவற்றிற்கு ஆக்கி யோர் பாயிரங்கள் இருத்தல் இயல்பன்று. அதுகொண்டு கடவுள்வாழ்த்தும் பிறவகைப் பாயிரமும் கூறும் மரபின்மை துணிதல் முறையன்று. அதற்கு மாறாக கடவுள் வழிபாடும் பிற வாழ்த்தியல் வகைகளும் தொல்காப்பியம் போன்ற மிகப் பழநூல்களில் கூறப்பெறுதலால் வள்ளுவர் நூற்பாயிரம் பழ மரபு தழுவியதென்பது தேறப்படும். அன்றியும் வள்ளுவர் குறள் அறநூலாதலால் அதன் பாயிரத்தில் கடவுள் வாழ்த் தொடு வருதற்குச் சிறந்துரியன அறம் பற்றியவேயாகும். அதனாலும் அந்நூற் பாயிரத்தில் அறன் வலியுறுத்தலும் அவ் வறனாற்றுவார் பெருமை யுரைத்தலுமே சாலப் பொருத்த முடையவாம். முற்றுத் துறந்தாரினும் தன்னலம் நீத்துப் பிறர்க்கென முயலும் இல்வாழ்வாரே அறக் கடனாற்றற்குச் சிறப்புரிமையுடையரென்பதும் வெளிப்படை. தமக்கு விடுதலை வேண்டிநோதல் வேண்டாத்துறவினும், பிறர்க்குதவும் வேள்வி தலைப்பட்டு நோன்றாள் விரும்பும் இல்வாழ்க்கை அறம்பல பேணும் சிறப்புடையதென்னும் தமிழர் கொள்கையை வள்ளு வரும் வலியுறுத்தக் காண்பாம். துறவற இயலிலும் துறவு, அறப்பற்றறவுகள் இறுதியிற் கூறப்படுவதாலும் அவற்றுக்கு முன் வருவனவெல்லாம் விலக்கின்றி இல்லறத்தார்க்கும் வேண்டப்படுதலாலும், யாண்டும் எஞ்ஞான்றும் நல்லன வெல்லாம் கடனாகக் கொண்டொழுகுவதே யில்வாழ்வா மாத லாலும், அறனெனப் பட்டதே யில்வாழ்க்கையென வள்ளுவரும் வரையறுத்திருப்பதாலும், அறனாற்றற்குத் தன்னலம் நீத்த இல்வாழ்வாரே சாலச் சிறந்துரியராதல் கொண்டு தம் அறநூற் பாயிரத்தில் அறன்வலியுடன் அவ்வறனேற்பார் அருந்திறலும் அமையக் கூறுஞ் செவ்வி வள்ளுவர்க்கன்றிப் பிறர்க்கியலாப் பெற்றியதாகும்.

உ

# சதுர்வேதி மங்கலம்

திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
ஆசிரியர், திருவையாறு.

அமிழ்தினும் இனிய நம் தமிழகம் மிகப் பழையகாலத்தே சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டியமண்டலம், என்னும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் சோழமண்டலத்தின் வடபகுதி சோழரின் வழித்தோன்றியவனும், பெரும்பாணாற்றுப்படை யென்னும்பிரபந்தம்கொண்டவனுமாகிய தொண்டைமான் இளந்திரையன் என்னும் மன்னன் காலத்தில் ஒரு தனி மண்டலமாகப் பிரிக்கப்பட்டுத் தொண்டைமண்டலம் என்னும் பெயர் எய்தியது. இத்தொண்டைமான் வழியினர் இம்மண்டலத்தைச் சுமார் கி. பி. நான்காம் நூற்றுண்டுவரை ஆண்டு வந்தனர்.

இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் பல்லவர் என்னும் மன்னர் குடியினர் தொண்டை மண்டலத்தையும், அதன் பின்னர்ச் சோழமண்டலத்தையும் கைப்பற்றி ஆளத்தொடங்கினர்.

சோழ மன்னர்கள் பல்லவர்களின் கீழ்க் குறுநில மன்னர்கள் ஆயினர். இக்காலங்களில் இவர்கள் தஞ்சாவூர் சில்லாவிலுள்ள பழையாறையில் தங்கி இருத்தல்வேண்டும். (இச்செய்தி திருநாவுக்கரசு நாயனர் புராணத்தால் உய்த்துணரக்கிடக்கின்றது.) பல்லவர்களது ஆளுகையும் கி. பி. 880-ஆம் ஆண்டில் முடிவு எய்தியது. பல்லவர்களும் சோழர்களின்கீழ்க் குறுநிலமன்னர்கள் ஆயினர். இப்பல்லவர்களின் வழித்தோன்றலே இதுபொழுது திருச்சிராப்பள்ளிசில்லா உடையார்பாளையத்தில் வதியும் சமீன்ருர் அவர்கள் ஆவர். இவர்களின் ஆட்சிக்காலங்களில் மண்டலம் கோட்டங்களாகவும், கோட்டங்கள் நாடுகளாகவும், நாடுகள், சதுர்வேதி மங்கலங்களாகவும், தனி ஊர்களாகவும், பிரிக்கப்பட்டிருந்தன.

இவற்றுள் சதுர்வேதிமங்கலம் என்பது சில சிற்றூர்களைத் தன்னகத்துக் கொண்டதாகும். சதுர்வேதிமங்கலம் என்ற இத்தொடர் சதுர்ப்பேதிமங்கலம் என்று வழங்கப்பெறுவதும்

உண்டு. இக்காலம் இதைச் சில ஊர்களைச் சேர்த்து வழங்கும் வட்டம் என்பதற்குச் சமமாகச் சொல்லலாம். இதற்கு மேற்கோளாக ஒரு கல்வெட்டைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

சுவஸ்திஸ்ரீ திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி கோவிஜயநந்தி விக்கிரமபன்மற்கு யாண்டு பதினேழாவது படுவூர்க் கோட்டத்து மீயாறுநாட்டுத் தீக்காலிவல்லமுடைய பரமேஸ்வரர்க்கு இந்நாட்டு **ஐம்பூணியும் விளத்தூரும்** இத்தேவர் தேவதானம் **அமருன்றிமங்கலமும்** விடேல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வேதிமங்கலமென்னும் பேரால் ஏக கிராமமாக மாவலிவாணராயனை விக்கிரமாதித்த வாணராயன் விண்ணப்பத்தாலும், காடுவெட்டித் தமிழ்ப்பேராயன் ஆணத்தியாலும் ஏகக்கிராமமாக்கி இவ்வமருன்றி மங்கலம் முன்னித் தீக்காலிவல்லமுடைய பரமேஸ்வரர்க்கு இறுத்து வருகின்ற ஐ(நெல்) இரண்டாயிரக்காடியும் பொன்னிருபதின் கழஞ்சு மிவ்விடேல்விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் இறுப்பாராகவு மிந்நெல்லில் திருவமிர்துக்கு நெல்லு அறுநூற்றுக் காடியும் ***திருவுண்ணாழிகை யுள்ளா ராதித்துப் பாசரிக்கும்** சிவப்பிராமணர்க்கு நெல்லு ஐஞ்ஞூற்றுக்காடியும் ஸ்ரீபலிகொட்டுவார்க்கு நெல்லு ஐஞ்ஞூற்றுக் காடியும் திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பல பணிசெய்வார்க்கு நெல்லு நானூற்றுக் காடியும், திருநுந்தாவிளக்கும் திருமெய்ப்பூச்சுக்கும் சிதாரிக்கும் மற்றும் கண்டஸ்படித நவகந்மாதிகளுக்குமாகப் பொன் இருபதின் கழஞ்சும் ஆக இந்நெல்லும் இப் பொன்னும் இத்தேவர்க்கு சந்திராதித்தவல் இறுப்பார்களாகவும் இப் பரிசு நிவந்தமாகச் செய்துகொடுத்தோம். இத்தர்மம் பந்மாஹேஸ்வரர் ரக்ஷை.

இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்ற பல்லவ மன்னன் கோவிசய நந்தி விக்கிரமபன்மன் ஆவன். இவனுக்குத் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்ற பெயரும் உண்டு. நந்திக்கலம்பகம் என்னும் பிரபந்தம் கொண்டவனும் இவனேயாவன். இவன் கி. பி. 830

---

* இத்தொடர் திருவுண்ணாழிகையுள்ளாரை ஆராதித்து உபசரிக்கும் என்று இருத்தல்வேண்டும். இதற்குக்கருப்பஇல்லில் எழுந்தருளியிருக்கும் கடவுளை ஆராதித்து உபசரிக்கும் என்பது பொருளாகும்.

(Taken from S. I. I. Vol. III. part 1 page 93.) இக்கல்வெட்டு வித்துவான் வகுப்பிற்குப் பாடமாகவும் வைக்கப்பட்டுள்ளது.

முதல் 854-வரை ஆண்டான். இம்மன்னனது 17-ஆம் ஆண்டின் அதாவது கி.பி. 847-இல் இக்கல்வெட்டு வெளியிடப்பட்ட தாகும்.

படுவூர்க் கோட்டத்து, மீயாறு நாட்டுத் தீக்காலிவல்ல முடைய இறைவனுக்கு இந்நாட்டிலுள்ள அமருன்றிமங்கலம் என்னும் ஊர் தேவதானமாக விடப்பட்டிருந்தது. இவ்வம ருன்றிமங்கலத்துடன் இந்நாட்டிலுள்ள ஐம்பூணி, விளத்தூர் என்ற இரண்டு ஊர்களையும் சேர்த்து விடேல்விடுகு விக்கிர மாதித்தியச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரால் ஓரே ஊராக ஆக்கப்பெற்றது என்ற செய்தியை இக்கல்வெட்டின் முதற் பகுதி அறிவிக்கின்றது. இதனால் யாம் மேற்குறித்த கொள்கை வலியுறுதல் காண்க.

இனி ஒரு சாரார், நான்கு வேதங்களும் வல்ல பிராமணர் களுக்குத் தானங் கொடுக்கப்பட்ட ஊர்தான் சதுர்வேதி மங்கலமாகும் என்று கூறி வருகின்றனர்கள். அவர்கள் கொள் கைக்கு ஆதாரங் காட்டிலர். அவ்வாதாரங் காட்டாதவரையில் அவர்கள் கொள்கை வலியுடைத்து ஆகாது.

---

# கலைகளும் வித்தைகளும்

## (SCIENCES AND ARTS.)

ஆசிரியர், திரு. த. இராமநாத பிள்ளை அவர்கள் B.A., (Lond.)
தும்பளை பருத்தித்துறை, இலங்கை.

மக்கள் தம்மறிவின் பயனைத் தம்பின்தோன்றுவோருக்குப் பயன்படுத்துமாறு தாம் உணர்ந்தவற்றைக் காரண காரிய முறையாக வரைந்து நூல்களாக எழுதுப. அந்நூல்கள் கலைகள் வித்தைகள் என இருபெரும் பிரிவின. பௌதிகநூல் பொரு ணூல் பயிர்நூல் மரநூல் விலங்கியனூல் உடனூல் தொல் லுயிர்நூல் என்னும் இயற்கை யாராய்ச்சிகளும், விலைநூல் மருத்துநூலாகிய அநுபவநூல்களும், அழகியனூல் ஒழுக்கநூல் அளவைநூலாகிய திறனாராயும் நூல்களும், எழுத்துக்கணிதம் வடிவக்கணிதமாகிய கணிதநூல்களும், உளநூல், தத்துவநூல், என்னும் அறிவுநூல்களும், கலைகள். சிற்பம், சித்திரம், சிலை

யெழுதல், படம்பிடித்தல், அச்சிடுதல், நெசவுசெய்தல், நாவாயோட்டல், மருந்தரைத்தல், ஆடல்பாடல், என்பன வித்தைகள். ஒலி, ஒளி, சூடு, மின்சாரம், காந்தம், என்னும் பூதங்களின் இயல்பைச் செப்பும் நூல்கள் பௌதிகநூலெனவும், எரிநீர் உப்புக்கறள் முதலிய பண்டங்களின் இயல்பைக் கூறும் நூல் பொருணூலெனவும், பொருட்களின் விலையைவிளம்பும் நூல் விலை நூலெனவும், ஒழுக்கம், அழகு, உண்மை, என்பனவற்றின் திறனை ஆராயும்நூல் திறனூராயும் நூலெனவும் கூறுப. மேற்கூறிய கலைகள் ஒன்றேனும் பலவேனும் வித்தையொன்றுக்கு ஆதாரமாகும்.

கலைகள் அறிவை மேன்மேலும் வளர்த்தற்கு ஏதுவாயிருப்பன. வித்தைகள் இல்வாழ்க்கைக்குரிய பண்டங்களைப் படைத்தற்குத் துணையாயிருப்பன. கலைகள் சுத்தபுத்தியை அப்பியசிப்பன. வித்தைகள் மெய்ப்பாட்டை நல்லாற்றுப் படுப்பன. கலைகள் கற்பிக்கும் உண்மைகள் தேரற்பாலன. வித்தைகள் பயிற்றும் முறைகளால் விளையும்பயன் துய்த்தற்பால. கலைகள் கிளக்கும் பிரமாணங்கள் ஆராய்ச்சிக்கு உரியன. கலைகளால் அறிவை வளர்க்கலாம். வித்தைகளால் அறிவின் பயன்களை விளக்கலாம். கலைகளைக் கற்றுத் தாம் எய்திய அறிவு மயக்கவறிவோ அன்றி முழுதுணர்த்தும் அறிவோவென அறிவுடையோர் ஐயப்படுகின்றனர். வித்தைகள் விதிக்கும் முறைகளை ஐயப்படாமல் அம்முறைகளை வித்தை வல்லோர் ஆளுகின்றனர். ஐயப்படுவோரே கலைகளை இடைவிடாது கற்று அவற்றின் பிரமாணங்களை நுணுகி ஆராய்ந்து விளக்குகின்றனர். துணிவுடையோரே, வித்தை முறைகளை ஆண்டு பொருளீட்டுகின்றனர். கலைஞர் தம்கலைகளைத் தேர்ந்து தெளிந்து ஒவ்வொரு கலையையும் வரையறுத்துக் கலைகளுக்குள்ள பொதுச் சிறப்புக் குணங்களைச் செப்புகின்றனர். வித்தை வல்லோர் பலவகை வித்தைகளையும் பயிற்சிபண்ணி அவ்வவற்றுன் விளையும் இன்பங்களை எய்துகின்றனர். கலைஞர் அநுபவத்தைக் காரண காரிய முறையாக ஆராய்கின்றனர். வித்தைவல்லோர் தம்முறைகளை அநுபவத்தால் செம்மையானவை யென அறிகின்றனர். கலைகளைக் கலாசாலைகளிலும் வித்தைகளை வித்தைச்சாலைகளிலும் கற்றுக்கொள்ளலாம்.

இயற்கைக் கலைகளைக் கற்போர் இயற்கை ஞானத்தையும் கணிதக் கலைகளைக் கற்போர் கணித ஞானத்தையும் எய்துவர். ஓவியம் என்னும் வித்தையைப் பழகுவோர் சித்திரங்களையும்

சிற்பத்தில் பழகுவோர் சிலைகளையும், அச்சிடுவோர் புத்தகங் களையும், நெசவைச் செய்வோர் ஆடைகளையும், பெறுவர்.

வித்தைகளுக்கும் கலைகளுக்கும் என்ன தொடர்பெனின், ஒன்று ஒன்றன் அவாய்நிலை; வித்தைகள் கலைகளினின்றும் தோன்றுவன. உதாரண முகத்தான் விளக்குதும். ஓவியம் அழகியனூலையும், நிருத்தம் இலக்கிய இலக்கணங்களையும், நாவா யோட்டல்பூகோளக்கலையையும், படம்பிடித்தல்பௌதிகப்பொரு ளூல்களையும், ஆதாரமாகக்கொண்டு தோன்றுவன. அற்றாகவி னன்றே ஒரு வித்தையைப் பழகுதற்கு ஒன்றுமுதற் பலகலை களைக்கற்றல் அவசியமென்ப. ஒழுக்கநூலை ஆதாரமாகவுடைய வித்தை யாதெனின் நல்லொழுக்கத்தின் சாதனையாகிய தீக்கையே. நல்வினை செய்தற்காக, நல்வினையின் இலக்கணங் களை ஒருவரும் ஆராய்கின்றிலரெனின், அது ஒக்கும். ஆனால் நல்வினை உண்டு. ஆதலின் அதற்கும் செய்வோர் வேண்டப் படும்; அச்செய்வோருக்கு அறிவு நிகழ்ந்தன்றி வினை முற்றா தாகலான், நல்வினை யறிவெனப்படும் ஒழுக்கநூலுணர்ச்சியே நல்வினைக்கு வித்தாகின்றது. நல்வினை என்னும் உணர்ச்சியின் மூலமே நல்வினை. இங்ஙனம் தத்துவநூல் கலையாக, சமயம் அதன் வித்தையாகுமெனின் மிகையாகாது. அறிவுநூலிற்கு வித்தையாதெனின் அவ்வறிவைத் தமக்கும் பிறர்க்கும்விளக்கும் கல்விநூல்களே. சமயத்தில்ஞானப்பகுதியும் கிரியைப்பகுதியும் உண்டு. அக்கிரியை, ஞானத்தையே பற்றுக்கோடாக உடையது. கலைகளும் வித்தைகளும் ஞானத்தைப் பயக்கின்றன. அவற்றின் வேற்றுமை என்னவெனின், வித்தைகளால் விளங்கும் ஞானம், பொது; கலைகளால் விளங்கும் ஞானம் சிறப்பு. என்னை! வித்தை யொன்றால் பலகலைகளையும் பேணும் பிரமாணமொன்றை உணர் கிறோமல்லவா? நாவாயோட்டும்போது கணித பௌதிகங்கள் கலந்த ஒரு ஞானவுணர்ச்சி உண்டாகின்றதல்லவா? மரக்கலஞ் செல்லும் வேகமும் காற்றின் வலியும் முறையே கணிதக்கலை விதிகளாலும் பௌதிகக்கலை விதிகளாலும் புலப்படுகின்றன அல்லவா? ஒரு வித்தையால் எழும் பொதுஞானத்தை அவ் வித்தைக்கு ஆதாரமான கலைகளால் ஆய்ந்து அப்பொது ஞானத்தின் சிறப்பியல்புகளை உணர்கிறோம். கலை ஒவ் வொன்றும் தத்தம் சிறப்பு ஞானத்தை விளக்குகின்றன. வடிவக்கணிதம் வடிவங்களைப்பற்றிய ஞானத்தையும், உடனூல் உடலைப்பற்றிய ஞானத்தையும், அழகியல்நூல் அழகைப்பற்றிய ஞானத்தையும், துருவித் துருவித் தேர்கின்றன. பிறகலைகளும்

இங்ஙனம் தத்தமக்குச் சிறப்பான ஞானங்களைப் புலப்படுத்துகின்றன.

## கலைகளின் சிறப்பியல்பு.

இனி, கலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஞானத்தைப் புலப்படுத்துகின்றமையால் ஞானங்களுள் சிறப்பு உண்டோ வெனின்; உண்டு. உடனூலிலும் உயிர்நூல் சிறந்ததாயும் இயற்கை யாராய்ச்சிகளிலும் கணிதநூல்கள் சிறந்தனவாயும் ஒழுக்கநூலிலும் தத்துவநூல் சிறந்ததாயும் இருத்தலை ஓர்க. விலங்கியனூல் மரநூல் உடல்நூல் உயிர்நூல் கணிதநூல் என்பன பாசஞானத்தையும், ஒழுக்கநூல் தத்துவநூல்என்பன பசுஞானத்தையும் தருகின்றன. விலங்கியல்நூல் மரநூல் உடனூல் தமக்கு இன்றியமையாததாகக் கொள்ளும் மாயையின் உண்மையை உளநூல்களும் அளவைநூல்களும் தத்துவநூல்களும் அறிவுநூல்களும் உண்மையென வற்புறுத்துகின்றன. ஆகையால் பிந்தியவை முந்தியவையின் சிறப்பா மென்பது தெற்றெனப் புலப்படும். யாவரும் போற்றும் வடிவக்கணிதநூல், வடிவங்கள் இடத்தில் இருப்பனவாகையால் இடம் உண்டென நம்புகின்றது. இடத்தின் தன்மை யாதெனின் கணிதவல்லுநர் விளக்கார். ஆகவின் வடிவக்கணிதமும் இடத்தின் உண்மை நாட்டுதற்குத் தத்துவநூல்களை வேண்டி நிற்கின்றது. உடனூல் உயிர்நூல் என்பன உடல் உயிர் என்னும் பொருட்களை உண்டென வற்புறுத்தும் தத்துவநூலையே, ஆதாரமாகவுடையன. இதுகாறும் கூறியவற்றால் ஞானநூல்களுள்ளும் சிறந்த ஞானநூல்கள் உண்டென்பது மலையிலக்காகும். பௌதிகநூல் பொருள்நூலாகிய இயற்கையாராய்ச்சிகளும், வடிவக்கணிதம் எழுத்துக்கணிதம் என்னும் கணிதங்களும், அழகியனூல் ஒழுக்கநூல் என்னும் திறனாராயும்நூல்களும் பொதுவாகவும், உளநூல் அறிவுநூல் தத்துவநூல் என்பன சிறப்பாகவும் ஞானத்தை விளக்குகின்றன.

இனி அளவைநூல் உளநூல் அறிவுநூல் தத்துவநூல் ஒன்றோடொன்று விரவியிருப்பினும் தத்துவநூல் இச்சிறந்த நூல்களுள் சிறந்ததாய்த் துலங்குகின்றது. அற்றாகவினன்றே அறிஞர் தத்துவநூலை ஞானநூலெனச் சிறப்பாக அழைக்கின்றனர். உலகவழக்கில் இயற்கையாராய்ச்சிகளையும் இயற்கை ஞானமென மொழிதலைக் காண்கிறோம். மேனாட்டு மொழிகளாகிய ஆங்கில முதலியவற்றில் இயற்கைநூல்களை ஞானநூல்களெனப் பொதுவாயும், தத்துவநூலை ஞானநூலெனச்

சிறப்பாயும் வரையறுத்துச் செப்புதலை நோக்குக. இங்ஙனம் கீழ் நாட்டாராலும் மேல் நாட்டாராலும் ஒப்பற்ற ஞான நூலெனப் போற்றப்படும் தத்துவநூலின் வரைவிலக்கணம் யாதென ஆராய்வான் புகுந்தேமாகலின் நூல்களின் இயல்பை ஒருவாற்றான் விளக்கினும். இனித் தத்துவநூலின் இலக்கணங் களைத் தேர்வாம். அங்ஙனம் தேருங்கால் தத்துவநூற்பொருளை யும் அதனோடு நெருங்கிய சம்பந்தமுடைய அறிவுநூல் அளவை நூல் உளநூல் என்பவற்றின் இலக்கணத்தையும் வரை யறுத்தல் அவசியமாகும். தத்துவநூல் திறனாராயும்நூல் என்பதை நாட்டி, அது அறிவுநூல் அளவைநூல்களின் இனத் தைச் சேர்ந்ததெனக் காட்டுவாம்.

## தத்துவநூலும் இயற்கையாராய்ச்சிகளும்

தத்துவநூலார் காலம் இடம் பிரகிருதி காரணகாரியம் நிலை யுள்ளவையெனக் காட்டியபின் அவைநிலையில்லாதவையாயினும் அவைஉண்டு என எண்ணி அப்பொருட்களின் இயல்புகளைத் தேர்கின்றனர். உடம்பு உண்டென எண்ணியே உடனூலாரும் உடலின் அவயவங்களைவகுத்து ஆராய்கின்றனர். ஒலி ஒளி சூடு மின்சாரம் காந்தம் என்பன இயற்கையின் தோற்றங்கள். அவை மாயையின் காரியங்களாகிய மாயேயங்கள்; அவற்றுள், காரணகாரியத் தொடர்புகளை உணரலாம் என்றே பௌதிக நூலாரும் பொருணூலாரும் இயற்கைப் பொருட்களைக் காண்ட லாலும் பரிசோதனையாலும் அளக்கின்றனர். இயற்கை யாராய்ச்சிகள் யாவும் காண்டலையே கொள்கின்றன. தத்துவ நூல் கருதல்முதலிய பலஅளவைகளுக்கும் உடம்படும். தத்துவ நூல் கூறும் பிரமாணங்களை இயற்கைநூல்கள் பேணுவதைப் பார்க்கலாம். இயற்கைவிதிகளைத் தத்துவநூல் ஆதாரமாகவுடை யது. ஒன்று ஒன்றன் விதிகளை உண்மையென நாட்டுகின்றது. ஆனால் தத்துவநூல் முழுதையும் உணர்த்த வேண்டியதாக, இயற்கையாராய்ச்சிநூல் இயற்கைப் பொருட்களின் இயல்பை மாத்திரம் ஆராய்கின்றது. இயற்கையாராய்ச்சிகள் இயற்கைப் பொருளை இற்றெனக்கிளக்குமொழிய அவற்றின் ஆதாரத்தை உணர்த்தா. இயற்கைநூலார் கூறும் நிலையுள்ள பொருட்களையும் நிலையில்லாதவையெனத் தத்துவநூல் காட்டக்கூடும். இயற்கை நூலாகிய உடல்நூல் உடம்பின் தன்மையையும் அதன்பகுதி களையும் பகுதிகளின்காரண காரியத்தொடர்புகளையும் ஆராயும். தத்துவநூல் உடம்பின் பரமஉண்மையையும் அதன் பின்னிலை யையும் அதன் முன்னிலையையும் அதன் பரிணாமங்களையும்

தேரும் ஆற்றலுடையதாகின்றது. பௌதிகநூலார் ஒலி ஒளி சூடு மின்சாரம் காந்தம் காலத்தினும் இடத்தினும் எங்ஙனம் தொழிற்படுகின்றன என்பதைச் செப்புவர். தத்துவநூலார் ஒலி ஒளி சூடு என்பவை யாண்டையவை என்பதைஇயம்புவர். இயற்கை யாராச்சி நூலார் தம்பொருட்களை குணிகளாக எண்ணி அவற்றின் குணங்களைக் கூறுகின்றனர். தத்துவநூலார் அப்பொருட்கள் குணிகளோ அன்றி வேறு குணிகளின் குணங்களோ வென, ஆராய்வார். ஒலி ஒளி சூடு என்பன, குணங்களையுடையன வாகையால் குணிகளெனச்சொல்லப்படும். அவைபொருட்களின் குணமென நாட்டினால் குணமெனச் சொல்லலாம். இயற்கை நூல்கள் தாம் தாம் குறித்த குணங்களை எடுத்துத் தேர்வன. தத்துவநூல் இயற்கைநூல் நுதலும் குணங்களை எடுத்து அக் குணங்களின் குணிகளைத் தெரிதலோடு நில்லாது அக்குணி களுக்கு வேறு சூக்கும குணிகள் உண்டோவெனத் தேர்கின்றது.

## உளநூலும் தத்துவநூலும்

உளநூலின் பொருள் உள்ளம், தத்துவநூலின் பொருள் தத்துவங்கள். உளநூல் ஒரு இயற்கையாராய்ச்சி; தத்துவ நூல் பரமவுண்மையாராய்ச்சி. உளநூல் உள்ளத்தின் மூல சுபாவக் குணங்களையும் மெய்ப்பாட்டு நிலைகளையும் உணர்த்து கின்றது. தத்துவநூல் தத்துவங்களின் திறத்தினைத் தேர் கின்றது. மேனாட்டார், உளநூல், வாயில்களின் தொழில்களையே ஓர்கின்றதெனப் பல்லாண்டுகளாகப் பகர்ந்தனர். இக்காலத்து உளநூலார் சிலர் தம்மாராய்ச்சியின் பயனாக உள்ளம் என ஒரு பொருள் உண்டென்றும் அவ்வுள்ளத்தின் சாக்கிரசொப்பன சுழுத்திநிலைகள் உண்டென்றும் மொழிகின்றனர். சென்ற நூற்றாண்டு உளநூலார் மனிதன் ஒரு யந்திரம் என்றும் அவ் வியந்திரத்தை மூளை என்னும் அதி நுட்பமான யந்திரம் தலையினுள் மத்தியில் இருந்து இயக்குகின்றதென்றும் அம் மூலயந்திரம் ஐம்பொறிகளை இயக்குகின்றதென்றும் அம் மூல யந்திரத்திற்கும் யாதொரு உணர்ச்சியும் கிடையாதென்றும் உடம்பாகியசடத்தின் அதிநுட்பவியக்கமே மனிதன் என்றும் மொழிந்தனர். மனிதன் சடப்பொருளொழிய சித்துப் பொரு ளல்லவென மேனாட்டார்வற்புறுத்தினர். வேறொருசாரார் எந்தச் சிறிய உடம்பும் அணுக்களை உடையதென்றும் அவ்வணுக்களின் இயக்கமே உயிர் என்றும் அப்பிராணனாகிய உயிர் ஒரு இயக்க மொழிய சித்தன்றெனவும் அவ்வுயிர் உடலழிய அழியுமென்றும் கழறினர், உடல்நூல், பயிர்நூல், மரநூல், விலங்கியல்நூல்

களின் கரைகண்டுணர்ந்த விருத்திவாதிகளாகிய, **கக்சிலி** தார்வின் **பிறிஸ்திலி** முதலியோர் இக்கொள்கையோரே. ஓரறிவுடைய புழுவாகினும் அது சீவனோபாயமும் இணைவிழைச்சுமுடைய தெனவும், அதன் வளர்ச்சியை எவ்வாறு தடுக்க முயன்றாலும் தான் வளர்தற்கு உபாயம்தேடுகிறதென்றும் அதன், ஒரு அவய வத்தை ஒடித்தால் அதைத் திரும்பவும் ஆக்கிக்கொள்ளுகிற தென்றும் பிற்காலத்து **விருத்திவாதிகள்** செப்புகின்றனர். அஃதன்றி ஓரறிவுடைய அணுக்களும் பிறவும் பாதுகாப்பி லட்சணங்களைப் போற்றித் தம் சூழ்நிலைக் கேற்ப நிறங்களை மாற்றி, தம்வளர்ச்சியையும் பிராணனையும் காக்கின்றனவெனவும் அறியக் கிடக்கின்றது. இலைகளில் வசிக்கும் புழுக்கள் இலை நிறமாகவிருந்து சத்துருக்களினின்றும் தம்மைப் பாதுகாக் கின்றன. சிறிய பிராணிகளும் வினைசெய்யும் நோக்கமுடையன எனவும் **மக்கேல்** முதலியோர் செப்புகின்றனர். உளநூல் வல்லுநர் **மக்கேல்** ஆன்மா உண்டென்பதற்கு ஒரு சிறந்த நியாயம் எழுதுகின்றனர். அது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஒரு புலன் ஒரு புலனின் உணர்ச்சியை உணராதாகலான் ஐம் புலன்களின் விடயங்களை விடயிப்பதற்குப் பொதுவாக ஒரு புலன் வேண்டுமென வற்புறுத்தினர். பலர் அப் பொதுப் புலனின் இருப்பிடம் கண்டத்துக்கு மேலே மூளையிலே உண் டென நினைத்துத்தேடி மூளைகளை வெட்டிப்பார்த்தும் காண வில்லை. புலன்களின் நரம்புகள் ஒரு பொதுவிடத்தில் கலவாமை யால் ஒன்று ஒன்றை அறியாதென்று கருதி ஒரு ஆன்மாவே ஐம்புலன்களையும் ஒருங்கு அறிந்து தொழிற்படுத்த வேண்டு மென **மக்கேல்** மொழிந்தனர். அற்றாகலின் உளநூலார் தம் நூற்பொருளாக உள்ளத்தின் தொழில்களாகிய விடயித்தல் இச்சித்தல் அறிதல் தெரிதல் தொழில்செய்தல் என்னும் நிலைகளையே கொள்கின்றனரென நாம் துணியலாம். இனி உளநூற்கும் தத்துவநூற்குமுள்ள சம்பந்தத்தை விளக்குவாம். உளநூல் விதிகளை இயற்கைநூல் விதிகளைப் போல, காண்ட லால் நிச்சயிக்கிறோமாகலின் உளநூலும் ஒரு அநுபவநூலே. தத்துவநூலார் இங்ஙனம் உள்ளத்தின் செயல்களை ஆராயாமல் உள்ளம் சித்தோ அசித்தோ சத்தோ அசத்தோ, பிருதிவி போன்றசடமோ, அன்றிப் பிராணன் போன்ற உயிரோவெனப் பல ஆசங்கைகளைப் பரிகரிக்கின்றனர்.

இஃதொரு புறமாக உளநூலாரும் அளவை நூலாரும் சிந் தனையைப்பற்றிச் சிந்திக்கிறார்கள்; ஆகலின் உளநூற்பொருளும்

அளவைநூற் பொருளும், ஒன்றென்பர், ஒன்றெனின் அற்றன்று. உளநூல், சிந்தனை எழும் வழிகளை மொழிகின்றதாக, அளவைநூல், சிந்தனைகளைச் சரியோ பிழையோவென்று ஐயுற்று அவற்றின் திறனை ஆராய்கின்றது. எமது யூகங்கள் கருதல்கள் நியாயமானவையோ அல்லவோ என்பதே அளவைநூற்பொருள். இது நிற்க, உளநூலும் அறிவுநூலும் ஒரு நூற்பொருளையே ஆராய்கின்றனவெனின், ஒரு புடை ஒக்கும். ஆனல் அறிவுநூல், பொறிகள் எங்ஙனம் விடயங்களை அறிகின்றன என்பதை நிச்சயித்தலோடு நில்லாமல், சித்து எங்ஙனம் அறிகின்றது, என்ன பொருட்களை என்ன கருவிகளால் என்ன முறைகளால் அறிகின்றதென்பதைத் தேர்கின்றது. அறிவுநூலார் உண்மை எது பொய் எது என ஆராய்கிறார்கள். அவர்கள் மனம் ஆன்மா கடவுள் உண்டோ இல்லையோ என்பதையும் அவற்றின் தொழில்களைப்பற்றியும் சிந்திக்கிறாராகலின், அறிவுநூலின் பொருள் வேறு, உளநூலின் பொருள் வேறு. கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் சடத்திற்கும் பிராணனுக்கும் சித்துக்கும் அசித்துக்கும் சத்துக்கும் அசத்திற்கும் உள்ள தொடர்புகளை உளநூல் ஆராயாதிருப்பதால், உளநூலும் தத்துவநூலும் வேறென்பதைக் கடைப்பிடிக்க. தத்துவ அறிவுநூல் சத்து உண்டோ இல்லையோவெனவும், நிலையில்லாத தோற்றம் எது, நிலைக்குந்தோற்றம் எதுவெனவும், ஐம்புலன்களுக்குத்தோற்றுவன உண்மையோ பொய்யோ எனவும் ஆராய்கின்றது. இதுகாறும் கூறியவற்றால் அறிவுநூலும் தத்துவநூலும் ஒரு பொருளையே தேர்கின்றனவெனத் தெற்றன விளங்கும். உளநூலார் ஆன்மாவின் இயல்பென்னவெனத் தேர்கின்றனர். தத்துவநூலார் பதி பசு பாசம் உண்டோவெனத் தேடுகின்றனர். அறிவுநூலார் சத்தினது இயல்பென்னவென வினவுகின்றனர். உளநூலும் தத்துவநூலும் வேற்றின நூல்கள் என்பதைக் காட்டினும்.

## தத்துவநூலும் அளவைநூலும்

இனித் தத்துவநூல் அளவைகளைக் கருவியாக இடைவிடாது உபயோகிப்பதால் அளவை நூலுக்கும் தத்துவ நூலுக்கும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டிப் பின்னர் தத்துவநூலின் நூற்பொருளைக் கூறுவாம். அளவைநூல் சிந்தனைப் பிரமாணங்கள் யாவை, அவற்றிற்கு ஆதாரம் யாவை, அவற்றின் உண்மை யாண்டும் உண்மையோ என்பவற்றைத் தேர்கின்றது. அளவைநூல் முறையான சிந்தனைகளுக்கும் பிழையான சிந்தனைகளுக்குமுள்ள வேற்றுமை நலத்தைப் புலப்

படுத்துகின்றது. ஒரு கருதல், சிந்தனைப் பிரமாணங்களுக்கு அமைந்துளதோ அல்லதோ என்பதை ஆராய்ந்து அவ்வுண்மையின் திறனைத் தேர்தற்குரியது. அளவைநூல் ஒரு பிரமாணம்; ஏன் பிரமாணமாகின்றது, எத்தன்மைப் பிரமாணமாகின்றது என்பவற்றை அளவைநூல் அளக்கும். அந்நுவயக் கருதல்களின் உண்மை, ஏன் அவ்வண்ணம் உண்மையாக இருக்கவேண்டுமென வற்புறுத்தற்குரியது அளவைநூலே. சுத்த புத்தியால் அளந்தெடுக்கப்பட்ட அளவைகளே மனிதனுடைய அநுபவம் யாவற்றையும் அளத்தற்கு ஆற்றலுடையதாகும். அளவைகளைப் பிரமாணமாகக் கொண்டே தத்துவநூல் தத்துவநூற் பொருளை அளக்கின்றது. இல்லது தோற்றாதென்றாற் போன்ற தத்துவநூற் பிரமாணங்களும் அளவைநூலால் எடுத்தாளப்படுவனவாகையால் தத்துவநூலுக்கு ஆதாரமான பிரமாணங்களும் அளவைநூலுக்கு ஆதாரமாகும். இனி அளவைநூலின் முடிபுகள் ஏனைய கலைகளாலும் முடிபெனக் கோடற்பாலனவாகையால் தத்துவநூலாலும் அங்ஙனம் கோடற்பாலன. அது காரணமாகவே அளவைநூலைக் கலைகளின் அளவையென அழைக்கின்றனர். இனி அளவைகளைக் கொண்டு அளக்கும் கருவிகளின் இயலை இயம்புவாம்.

## புத்தியே கருவி; அதன் முடிபே முடிபு.

ஞானங்களுள் தலையாயது தத்துவஞானமாகலான், தத்துவஞானம் என்பது ஒரு ஞானமாதலோடு நில்லாது, நம்வாழ்க்கை நோக்கத்தின் திறனை உணர்த்தும் நூலாகுமென ஆசிரியர் **அரிஸ்தாதில்** அறைந்தனர். நம் வாழ்க்கை ஒரு பேய்த்தேரோ அன்றி ஒரு நிலையுள்ளதோ என்பதே சிறந்த ஞானநூலின் நூற் பொருளாதல் வேண்டும். சத்தியமே (வாய்மையே) கடவுள்; "பரம ஞானத்தை உணர்தற்கு அளவைநூல் கருவி," என்றார் **பேற்றண்ட் ரசல்**. ஆன்மா முடிவிலாற்றலுடையதாய் நித்தமாய் சுதந்தமாய் சச்சிதானந்தமாய் இருக்கவேண்டுமென எதிர்பார்த்திருப்போர்-தத்துவநூலைக் கற்கும்போது ஒருபாற் கோடி உண்மையைக் கடைப்பிடியாது அருளுள்ள கடவுள் உண்டென்றும் ஆன்மா நித்தமாதல் வேண்டும் என்றும் எண்ணி அவற்றிற்கு மறுதலையான நியாயங்களைத் தூக்கி ஆலோசிக்கின்றிலர். ஆங்கிலக்கணிதவல்லுநர் **ரசல்** ஆன்மாவும் கடவுளும் பேதம் என நம்பியிருந்தனர். பிராஞ்சு தேசத்துப் **பேக்சன்** தத்துவஞானம் கற்போர் உண்மையையே கடைப்பிடிக்க வேண்டும் என்றார். அவர் பிராணனே உண்மை என்னும்

கொள்கையுடையர். அவர் உலகில் சடமில்லை பிராணனே உண்டு என்றார். சத்து சித்து ஆனந்தம் என்பன இல்பொருள் என நாட்டும் நியாயங்களை ஆத்திகர் நம்புகின்றிலர். அந் நியாயங்களை அவர்கள் தூக்கிச் சிந்திக்கின்றிலர். இனி அறிஞர் தெளிந்து கூறினும் அவர் கூற்றை நாம் உரையாகக் கோடலாகாது. எமது ஆராய்ச்சியில் நாம் எண்ணியிருக்கும் குணங்களையுடைய கடவுள் ஒருவரை எமது ஆராய்ச்சியின் பயனாய்த் துணியவியலாதாயின், எமது ஆராய்ச்சியையேனும் அதை அறிந்த எமது கருவியாகும் புத்தியையேனும் பிழையென நினைத்தல் பொருந்தும். பதி பசு பாசங்களே இல்பொருளென எமது புத்தியாலும் எமது அளவைகளாலும் அறிந்தால் அவ்வுண்மையை நாம் கடைப்பிடிப்போமாக. நூல்கள் கூறும் உரைகளுக்கு விரோதமாயும் நாம் சிந்தித்து ஒரு துணிபைப் பெறுதல் தவறென மலையற்க. புத்தியே எங்கள் கருவி. புத்தி மூலமாகவே நாம் உணரவேண்டும். இவ்வுண்மையை மேனாட்டார் யாவரும் வற்புறுத்துகின்றனர். தத்துவநூலின் பொருளும் இயற்கை ஆராய்ச்சிகளின் பொருளும் சமயநூலின் பொருளும் ஒரேதன்மை என மேனாட்டார் முழங்குகின்றனர். ஆராய்ச்சியால் நாம் அறிவியல்நூற் பொருட்களின் இயல்பை அறியலாம் என்பர். புத்தியைக் கருவியாகக் கொண்டு தத்துவ நூற் பொருளைத் தேர்வாம்.

(தொடரும்.)

உ

# *"நாட்டு முன்னேற்றம்"

திரு. இ. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், தமிழாசிரியர்,
அரசர்கல்லூரி, திருவையாறு.

நாட்டு முன்னேற்றம், எனும் இத்தொடர் மொழியினை நாட்டினது முன்னேற்றம், நாட்டின்கண் ஏற்றம், நாட்டுவாய் முன்னேற்றம் எனப் பலவாய் பொருள் கோடற்கேற்ற பெற்றியவாய்விரித்தல்தகும். (ஏற்றம்—உயர்வு. ஏறுதல் எனப் பொருள்படும்.)

* இது, விளாங்குடி, தமிழர் கழகத்தின், ௪-வது ஆண்டுவிழாவில், செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், திரு, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் B.A., B.L., தலைமையில் நிகழ்த்தப்பெற்றது.

முதன்முதலில், நாடாவதியாது எனவாராய்வாம். சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிதுவென்ற வள்ளுவன்றன் வாயுறை வாழ்த்தாந் திருக்குறள் பொருட் பாலின்கண் அரசியலுறுப்பினைத் தொகுத்து நாடெனவொருவதி காரம் வகுத்து, அதன் சிறப்பினையே பத்துக்குறளில் விதந்து பதித்தனர் எனின், அந்நாட்டினைப்பற்றி மற்றையாரியாங்ஙனம் எடுத்தியம்புதல்கூடும். "படைகுடி கூழமைச்சு நட்பரணாறும் உடையானரசருளேறு" என விறைமாட்சியெனுமதிகாரத்து முதற்பாவில் அரசற்கா முறுப்புக்களைத் தொகுத்துத் தோற்று வாய்செய்து, பின்னர், நாட்டினைவகுத்து விரித்துரைப்பாராயினர்.

ஈண்டுக் குடியென்றது தானியாகுபெயராய் நாட்டினை யுணர்த்திற்று. அரசர்க்குறுப்பாவன விவையென்பதும், இவை முற்றுமுடைமையே அவன் வெற்றிப் பொருட்டென்பதுங் கூறப்பட்டன வெனப் பரிமேலழகர் கூறுவர். இவை முற்றும் உடையனாதல் வேண்டும் என முற்றும்மை கொடுத்தாக் கூறிய வதனால் இவற்றுளொன்று குறையின் ஊனமுடையன் எனப் பொருள்படுமன்றோ! ஆகலின் ஒன்றுங் குறைதலாகாதெனவே வற்புறுத்தப்பட்டதாகும். இவை யுறுப்பா யுறுதலின்; இவ் வாற்றான் அரசற்குச் சீரிய வுறுப்பா யிலங்குவது நாடுமொன் றாகுமெனப் போதருகின்றது. மேலும், அங்கி அரசனும், படை குடி முதலியவாறும் அங்கமும் என்பது புலப்படுகின்றது.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தற் கொளி"

என்ற குறளிலும், குடியோம்பல் என நாட்டுக் காப்புங் கூறப் படுகின்றது. "உடலைப்பேணா உயிருமில்லை உயிரைப்பேணா உடலுமில்லை."

நாடென்பது, நாடப்படுவனவற்றை யளிப்பதும், பிறர்நாடி வரும்படிச் செய்வதும் ஆக விருப்பதால் காரணப் பெயராயிற் றாம். இப்பெற்றியால், மக்கள் தக்க நிலையுறுதற் பொருட் டெனக்கருதி யுறைதலின் அதனிடை வாழ்வார் குடியெனப் பட்டனர். நன்றுடைப் பொருளியாவுங் குடிகொள்ளப்பெறலின் குடியாயிற்றென்றலும் ஒன்றாம்.

இனித் திருவள்ளுவர் வகுத்துக்கூறும் நாட்டினியலை நாடு வோம்.

"தள்ளா விளையுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

இக்குறட்குப் பரிமேலழகர், குன்றாத விளையுளைச் செய்வோரும் அறவோரும் கேடில்லாத செல்வமுடையோரும் ஒருங்கு வாழ்வதே நாடாவது, எனப் பொருள் பகர்வர். இக்குறளின்கண் தள்ளாவிளையுள் எனவாகுபெயராய் வேளாண்மை செய்யும் வேளாளரையும் தாழ்விலாச் செல்வர் என வாணிகஞ் செய்யும் சீரியரையும் அடைமொழி தந்து கூறித் தக்கார் என வறவோர்க் கடைகொடுத்துக் கூறாததுபற்றித் திருவினால் ஒன்று புலப்படுகின்றது. அதனைப் பின்னர்ப் புலப்படுத்துதும்.

வேளாண்மை புரியும் வேளாளர், வாணிகஞ் செய்யும் வணிகர், இவ்விருவகையினரிலும் பற்றுவிட்டுத் துறவுநிலையுற்று எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணாளராகிய அறவோர், இம்மூவகையினரையும் புரக்கும் மன்னர் எனப் பொருள் கொண்டு, இந்நால்வகையினராய தமிழ்ப் பெருமக்களே குடியிருந்தொன்றி வாழப்பட்டதே நாடாம் எனக் கோடலே யேற்புடைத்தாம். இதுவே இக்குறளின் குறிப்புப்பொருளாம்.

இந்நால்வகையினரும் செய்கை வேறுபாட்டான் இங்ஙனம் பிரிக்கப்பட்டனர். அன்றி, இந்நாட்டின் வளங்கண்டு குடியேறிய ஆரியர் தாம் நாட்டிய நால்வகைப்பிரிவன்றாம். இந்நால்வகையினரையே தற்போது மாறிக்கொண்டேவரும் நால்வகையினராக வொட்டி வழக்கொடு படுத்து நூல் யாத்தனர். இதற்கு அக்கால வரசினர் சட்டந் தந் தாதரித்தனர்; இன்றேல் அன்றே குழிதோண்டி புதைக்கப்பட்டிருக்கும்.

ஈண்டுத் தக்கார் என்றது ஆரிய மக்களையன்றாம். உளம், உரை, உடல் என மூன்றானும் உன்னல், உரைத்தல், உஞற்றல் ஆகிய மூன்றினையும் ஒன்றுபட்டுச் செய்யுந் தவப் பெருக்குடையர் தமிழ்ப் பெருமக்களே யாவர். ஆகவின் அறவோரெனப்படுவார் யாவர்? ஆரியர், இவ்வறவோரைப் புரையத் தவவுருத்தாங்கி யந்தணரெனப் பெயரைத் தாமே சூட்டிக் கொண்டு தமிழ்நாட்டினர்க்குத் துறவு, தவவுரு முதலியன வின்றெனை வலியுறுத்த முற்பட்டனர்.

"வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று."

என்ற குறளும் இவரை நோக்கியே எழுந்திருத்தல் வேண்டும்.

முன்னர்ப் பின்னர்ப் புலப்படுத்துவம் என்றேம். அஃதென்னையோ வென வாராய்வாம். ஈண்டுத் தக்கார் என விடை

நிறுவியதன் பொருட்டினை நோக்குழி, முன்னைய விளையுளுக்கும் பின்னைய் தாழ்விலாச் செல்வருக்கும் தலைசிறந்த துறவோராகிய தக்கார் அருளாணையின்றெனின் இன்றென் றற்கும் உண்டெனின் நாடு (உலகு) நன்னலமுறுகின்ற தென்றற்குமே நடுநிலைவிளக்காக நாயனார் நாட்டியதென்பது புலப்படுகின்றதன்றோ! சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும் அறத்து வழிப்படூஉம் என்பதும் ஆராய்தற்பாற்றும்.

நந்தமிழ்மொழியின்கண் அடைமொழி யடுத்து வாராத வெவையோ, அவையாவு மிகச் சிறப்புடைப் பொருளாகவே யிருக்கும். திருகோவையாரின்கண்,

"திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்கு தெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடை வாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே"

எனு முதற்பாட்டில் ஏனையுறுப்புக்களுக் கடை கொடுத்து, கோங்கென்பதற்கடை கொடாததுபற்றிப் பேராசிரியரும் திருவலகு, திருத்தண்டு, திருத்தாமம் எனச் சுற்றுப்படைப் பொருட்கடை கூறி, எல்லாம் வல்ல நாயனாரைத் திருநாயனார் என்னாதது போல ஏனையவற்றினுந் தலைசிறந்த கொங்கை யெனற் கடை கொடுத்திலர் எனவும் அடைகொடாமையே சிறந்ததுஎனவும் வலியுறுத்துகின்றார்.

இப்பெற்றியானே, அறத்தக்கார், உயிர்கண்மாட் டன்பு செயு மன்புத்தக்கார், அருட்டக்கார், உற்றநோய் நோன் றுயிர்க் குறுகண் செய்யாமையாகிய தவத்தக்கார், பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய் முற்றவா லுணர்வுமேன் முடுகு மறிவுத் தக்கார் முதலியவர்களே ஈண்டுத் தக்காரெனப்பட்டார். நல்லார் ஒருவர் பொருட்டே நாட்டுக்கு மழைபெய்யும் என்பதும் எண்ணல்வேண்டும்.

இக்குறட் சிறப்புரையின்கண் தள்ளாவிளையுள்—குன்றாத விளையுளைச் 'செய்வோர். இவர் வேளாளர் ஈண்டுக் குன்றாமை எல்லாவுணவுகளும், நிறையவுளவாதல். இதனான் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது எனவும், தாழ்விலாச் செல்வர் வழங்கத் தொலையாச் செல்வர் என்றும், செல்வர் என்றற்குக் காலினும் கலத்தினுஞ் சென்று அரும்பொருடரும் வணிகர் என்றும், அறவோர் என்றற்குத் துறந்தோர் அந்தணர் முதலாயினோர் என்றும் பரிமேலழகருரைக்கும் பண்புதானென்னே! கலத்தினும் சென்றரும் பொருடரும் வணிகராய தனவணிக

ராயினர் இற்றைநாளின்கண் நந்நாட்டின்கண் வளமுற்றில ராயின், திருக் கோயில்க ளெங்கே, திருத் தளிக ளெங்கே, கலாசாலைக ளெங்கே! வள்ளுவர் பெருமகனை இதனாலன்றோ, "வள்ளுவன் றன்னை யுலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனவொருவர் சிறப்பிக்கலாயினர்.

நாட்டினைப் பற்றிச் சிந்தாமணியில்,

"நற்றவஞ் செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்
நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள்செய்வார்க்கு மஃதிடம்
பெற்றவின்பம் விளைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தென
மற்றநாடு வட்டமா வவைகுமற்ற நாடரோ"

எனத் திருத்தக்கதேவர் செப்பிய சீரினைப் பாருங்கள். மேலும்,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

இதன் பொருள், தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர் பாற் றானே வந்தடையுஞ் செல்வத்தை யுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர், ஆதலாற் றேடி வருந்தச் செல்வமடைவிக்கு நாடுகள் நாடாகா எனவும்,

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

(இ-ள்) வேந்தனோடு மேவுதலில்லாத நாடு மேற் சொல்லிய குணங்கள் எல்லாவற்றானும் நிறைந்ததாயினும் அவற்றாற் பய னுடைத்தன்று எனவும், வேந்தமைவு எனவே குடிகள் அவன் மாட்டன்புடையராதலும் அவன்றான் இவர்மாட் டருளுடை யனாதலும் அடங்கின; அமையாவழி வாழ்வோரின்மையின், அவற்றாற் பயனின்றாயிற்று எனவும், இவ்விரு குறள்களானும் பெறப்பட்டன. இவற்றாற் போந்த பொருளாவன.

நாட்டின்கண் வாழ்வார் நாடாமல் தொடுப்பினொன்று ஆயிர மாக வளநந்தவும் இதனைக்கண்டு பிறநாட்டினர் குடியேறப்படு வதுமாகியதென்பதும் ஒருபிடி படியுஞ் சீறிடம் எழுகளிறு புரக்குநாடு என்பதும் பிறவுமே. "அனைவோர்க்குந் தெய்வம் இலைமுகப் பைம்பூணிறை" என்ற செய்யுளைப் பார்க்குமிடத்து, வினையினீங்கி விளங்கிய வறிவினையுடையனாகிய முதல்வன், அற வாழியந்தணனாய், அருட்டன்மையனாய் எல்லார்க்கும் பொது வினடமிடுகின்ற சிவமாய் இலங்குவதுபோல, அரசனும், கண் ணிற்சொலிச் செவியினோக்கு மிறைமாட்சியுடையனாய், உயிர் கண்மாட்டருளுடையனாய், உலகினையுடலாய் அதனிடைப் படு

முயிராய், தன்னுயிரைப்போல மன்னுயிரையும் புரக்கும்பெற்றி முற்றியவனாய், என்பிலதனைக் காயும் வெயில்போல, அன்பிலதனைக்காயும் அறநெறி திறம்பாச் செங்கோன்மையனாய், அருளுமன்பு நீங்கி, நீங்கா நிரயங் கொள்பவரோடொன்றாத வனாய், குடிகளைக் குழவி கொள்பவரினோம்பு மழகுமீக் கூர்ந்தவனாய், நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம் என்பதை யுன்னு முரவோனாய் இருத்தல் வேண்டும் என்பதும் புலப்படுகின்றது. இன்னவனே நாட்டினைப் புரக்கு நடுநிலை யிறைவனாவான்.

உலகத்தில், உயிர்த்தொகுதிகள் உடலோடொன்றிமன்னும் படிச்செய்தலினாற்றான் மன்னன் எனக்காரணப்பெயர்போந்தது. தயரதன் வாயிலாவைத்துக் கம்பரும்,

"அறுபதி னாயிர மாண்டு மாண்டுற
யுறுபகை யொடுக்கி யிவ்வுலகை யோம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுறு மென்பதோர் மறுக்கமுண்டரோ,"

"அருந்தவ முனிவரும் அந்த ணாளரும்
வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்
இருந்துய ருழக்குநர் எற்பினென்ப தோர்
அருந்துயர் வருத்துமென் னகத்தை யென்றனன்."

எனக் கதறிச்செல்கின்றார்.

உலகின் பொருட்டுழைக்கு முயர்வுறு தொண்டினை மேற்கொள்வித்தகனாகிய தயரதன் எற்பின், இந்நாடும், இந்நாட்டின்கண் வாழும் உயிரும் எங்ஙன மறுக்கமுற்று யாது புரியும் எனக் கலங்கிக் கூறிப் புதல்வர்ப் பேறுபெறும் பெற்றியை யெடுத்து விண்ணப்பிப்பானாயின், அக்கால அரசியலின்றிறந்தானென்னே!

இதனாலன்றோ, மாதவர் நோன்பும் மடவார் கற்புங் காவலன் காவலி னமைவதாயின; சைவசமயக் கோளரியாகிய சம்பந்த மூர்த்தி நாயனாரும் இப்பெற்றியுற்ற விறைவனும் நாடும் வாழ வேண்டுமென்பார். "வேந்தனு மோங்குக-ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே, சூழ்க வையகமுந் துயர் தீர்கவே" எனத் திருவாய் மலர்ந்தருளினர். மேற்கூறிய இந்நெறியுறாத வரசன், அரசனெனப்படான். நிற்க. நம் பழையநூல்கள், நாடுகளை மொழிகள்பற்றியும் திணைபற்றியும் வகுத்துள்ளன.

"தென்பாண்டி குட்டங் குடற்கற்கா வேண்பூழி
பன்றியருவா வதன் வடக்கு—நன்றாய
சீதமலாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்"

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலம்
தங்குபுகழ்த் தமிழ்சூழ் பதினேழ் புவிதா மவையே"

எனவும் பதினெண்டேய மாந்தர் எனவும் பிறவாறுமாகப் பகுக்கப்பட்டுள. முல்லைநாடன், மருதநாடன், குறிஞ்சிநாடன், நெய்தல்நாடன் என நூலகத்து வரும்.

பனம்பாரனார், "வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" என்கின்றார். இந்நான் கெல்லைக் கண்ணதாகிய பரப்புச் செந்தமிழ் வழங்கு நாடாம். இஃது அகப்பாட்டெல்லையாகும். வடபால் வட பெருங் கல்லாகிய விமயம் தென்பாற் குமரி இருபாற் கடற்பரப்பு, இந்நான் கெல்லைக்கண்ணது புறப்பாட்டெல்லையாம் எனவொரு நூல் கூறும். தமிழ்மன்னர் நன்கினிதாச் செங்கோன்மை செலுத்தப் பட்ட நாடு இந்நாற் பரப்பகமேயாகும். வேற்றுநாட்டாருடன் றொடர்பு முண்டாயிருந்தது. எங்ஙனமென்றால் "கடற்பஃ றாத்த நாடு கிழவோன், என வருதலினென்க. நந்தமிழ்நாட்டு மன்னர்க்குரிய கொடிகளை விமயவரையி னுச்சியிற் கட்டியும் பொறித்துமுள்ளார்கள் என நூல்கள் நுவலுகின்றன. கயலை யும் வில்லையும் புலியையுங் கொடியாக் கொள்வானேன் என்றால் அதன் முறையினைப் பின்பு கூறுதும். அக்காலத்து வடநாடு தென்னாடு பற்றியமொழி வேற்றுமையின்றாம். ஆரியாவர்த்த மிருந்து வந்து குடியேறிய அவ்வாரிய மக்களாலேயே இவ் வகுப்பு வந்துள்ளது.

நாம் இதுகாலை அங்கிலமொழியினரால் ஆளப்பட்டு வரு கின்றோம். அவர்தம் நாடு ஆயிரக் கணக்கான மைலுக்கப்பாலும் கடலுக் கப்பாலும் ஆகவுள்ளது. அவர்தம் மொழியாகிய ஆங்கிலமே யரசியல் மொழியா யிலங்குகின்றது. நம் நாட்டில் நடமாடி நம்மிளஞ் சிறார்களை தலைவிரி கோலமாக்கிக் கொண்டு வருவது நாம் கண்கூடாகக் காணப்படுவ தொன்றன்றோ! அங்ஙனமிருப்ப, இயற்கைக்கும் மாறுபாடில்லா நம் செந்தமிழ் மொழி அரசியல் மொழியாகிய நாட்டுமொழியா யிருக்கையில் நந்நாட்டில் எம்மொழி பரவியிருக்கும். கடல் கடந்து தாவி

வந்துற்ற ஆங்கிலமொழி நம்மைத் தலைப் பிடித்திழுத்துத் தாய்மொழியென்றுஞ் சொல்லக்கூடிய நிலையில் வந்துவிட்டதே! நிலப்பரப்பகத்து நிலைத்தமொழி வேற்றுமொழியாய் விட்டதே ஆகையினால், செங்கோன்மையிற் சிறிதும் பிழையாதே, சிவ பெருமான் திருவருளுக்குரியராய் ஆட்சியினை நம்மன்னர் புரிந்த ஞான்று அரசியல் மொழியாகிய தமிழ்மொழிதானே எங்கும் பரவியிருக்கும். எவ்வளமுங் கூடிய நந்நாட்டில் வளங்கண்டு குடியேறிய ஆரியர் முதன்முதலில் நந்நாட்டுமொழியினை நன்கு கற்றுக்கொண்டு பின்னர், புராண முதலியனவும் புலம்பலாயினர். தமிழ்மொழியி னுருவினைச் சிதைக்கலாயினர். தீர்த்தம், கலை, அருள், அன்பு, சோறு, சாறு முதலிய தூய தமிழ்ச்சொற்களை பொருளளவின்றி மாற்றிக்கொண்டனர். தீர்ப்பது கல்லுவது (அறியாமையினைக் களைப்பது) அருள்-கிருபை, கருணை. அன்பு-பத்தி, அன்னம், இரசம், இங்ஙனமாக்கிக் கொண்டனர். அன்பென்பது யாண்டு மடுத்து வருமே. கருணையினை இறை, தாய், தந்தை, குரவர், மகார், மனைவி, அடிமை, விலங்கு முதலிய எப்பொருளொடும் படுத்துக் கூறலாமா? பத்தியை யங்ஙனங் கூறவியலுமா? கூறிப்பாருங்கள், கூறவாரா? **பரிதிமாற் கலைஞன்** ஆரியர் தமிழ்நாட்டிற் குடிபுகுந்தது நன்மைக்கா? தீமைக்கா? எம் தமிழர்கள் தம் மதி நுட்பத்தாற்கண்ட அரும்பெருநூல்களைத் தம் மொழியில் மொழிபெயர்த்துக்கொண்டு, நீங்களறிதற்கு முன்னரே நாங்களறிந்துளேம் என்று கூறி தமிழ்நூல்களை யழிக்கலாயினர் எனவும் கூறியுள்ளார். தாம் பேசிய மொழியினைத் தேவபாடையெனச் செப்பிவரலாயினர். அது பின்னர், நந்நாட்டுக் கோயில் தேவர்பாடையாய்க் குலாவிவர வியற்றப் பட்டது. நந்நாட்டு மொழியினை நம்மோடு பயிலக் கற்றுக் கொண்டு நந்நாட்டுப் பழக்க வழக்கங்களையும் மொழிச் சிறப்பியல்களையும் சிதைக்க முற்பட்டனரே! அந்தோ, கொடுமை! கொடுமை! அன்று மொழித்தனர் இன்று மொழிக்க முற்பட்டனரே!

சேரமான் பெருமாணுயனர் கயிலைப் பொருப்பகத்தில் பாடிய கைலாய ஞானவுலா எங்ஙனம் ஆண்டரங்கேற்றப்பட்டது. இறைவனெழுந்தருளிய கோயிற் பணியாளர் முதலினோர் எம் மொழி பேசி வந்தனர் ஆவர்? அன்றித் தேவபாடை யெனப் படுமம் மொழியில் பெயர்த்துக்கூறி யரங்கேற்றப்பட்டதா? மொழி பெயர்க்கத்தான் முடியுமா! ஆகவே கயிலைப் பொருப்பிற் கேட்டோரும் தமிழ்ப் பெருமக்களே. மொழிபெயர்ப்பு என்பது தமிழியல் அன்று.

இங்கிருந்து அங்கு மொழிபெயர்க்கப்பட்டு மீண்டு மத் தொழிலை யாரியரே தமிழில் ஏற்ற ஏற்றுக்கொண்டனர். மொழி பெயர்ப்பு என்பதற்கு ஆரியத்தினின்று பெயர்ப்பதற்கு தான் மொழிபெயர்ப்பு என்கின்றது சிறிது மடாது. கலைநூல் பொருணூல், திணைநூல் முதலியன வனைத்து மன்னவேயாயின. ஆரிய நாட்டினர் தம்மைச் சுரரெனவும் தேவரெனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். யார் கொடுத்தா ரிப்பெயர்களை, கயிலை மலையின்கண்ணும் ஆரியர் நுழைந்தனர். அங்குமிறைவன்றனக் குரிய பெயர்களை பெயர்த்துக் கூறிவரலாயினர். "தொடக்குங் கடவுட் பழம்பாடல்றொடையின் பயனே, நறைபழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே" என்பது திருவாசக திருக் கோவையாரினைக் குறித்ததா? இல்லையா! இறைவனும் ஆரியப் பேரிறைச்சல் கேட்கமுடியாமற் றென்றிசைநோக்கி வந்தனனோ வெனவும் ஐயப்பாடுறு நிலைமையில் வந்துவிட்டதே! இறைவ னிலையினையிறையுமறியா வாரியர் இங்குமிறைவனைத் தொடர்ந்து வந்து கோயிற்றொண்டு பூசை முதலியவற்றினையும் மாறுபா டுறுத்தினர்.

ஒரு நாடு மேனிலை முன்னேற்றம் எங்ஙன முற்றிருந்தது என ஆயின் இறைவ னிறைகோயில், அவ்விறைவ னருள்வழி யொழுகும் நல்லரசன், நல்லமைச்சன், நல்லமொழி, நல்லவள முடைமை முதலியவற்றான் என்பது புலப்படுமன்றோ! அங் ஙனமே பண்டுள்ளது நம்நாடு.

நாட்டிற்குரிய அறுவகை மாட்சியினை யோராசிரியர், "செல் வமே விளைவுமிக்க செழுவளஞ் செங்கோலுண்மை, ஒல்குநோய் குறும்பில்லாமை யுற்ற நாட்டமைதியாகும்" எனக் கூறினர். காவிரிப்பூம்பட்டினத்துக்குப் புகார் எனப் பெயருண்டு. வேற்று வளம், வேற்றுப் பொருள் முதலியனவற்றினைக் கருதிப் பிறர் நாட்டுக்குப் புகாராதலின் புகார் எனப் பெயர் போந்ததாம். மற்றையநாட்டினர் இதன் வளங்குறித்துப் புகார் புரிந்துகொண் டிருத்தலின் இப்பெயர் போந்ததெனவு மொன்றும். நாடப் படுவது நாடாயினமை போல.

நம்நாட்டுக்குப் பொதுமொழி யொன்று வேண்டுமெனப் பகீரதன் பட்டபாடு படுகின்றார்கள். சர்மனி, சப்பான், பிரான்சு முதலிய நாட்டுக்கு நாட்டுமொழி யுள்ளனபோல நந்நாட்டுக்கு மொழி வேண்டாமா வென வேண்டுகின்றார்கள்; நந்நாட்டைப் பிடித்த பேய்கள் ஒன்று, பலவன்றே! வையங் காவலர் வழி மொழிந்தொழுகப் போகம் வேண்டிப் பொதுச்சொற்பொருண

யாண்டு வந்த காலத்தன்றோ வஃது இயலுவதாயிற்று. அதன் பின்னர், நம்நாட்டினை துலுக்கர், மராத்தியர், வெள்ளையர் முதலியவர்கள் ஆளத் தொடங்கின காலத்தே தங்கள் மொழியினையே அரசியல் மொழியாய்க் கொண்டாளத் தொடங்கின போதும் தமிழ்மொழியும் தமிழ்நாடும் சிதைக்கப்படவில்லை. சிதைக்கப்படப் போவதுமில்லை. ஆகையால் பல்வளமும் பல மதமும், பலசமயமும், பலசாதியும் பல்கிக் கிடக்கையில் ஒரு மொழியாவது எங்ஙனங்கூடும்? இவற்றினை யொன்றுபடுத்துவது யுகாந்த காலத்தேயாம். அப்படி யொன்றுபடுகின்றுழி நாமும் இந் நினைவொடிருப்போமாயின் இக்கொள்கை நன்கு வலியுறு மென்ப தொருதலை. ஆகலான் நாட்டுக்குப் பொதுமொழி யொன்று வேண்டுமென வாய்வோர் தமிழ் மொழியினையே வைத்துப் பிறங்கச் செய்தால் அவர்தம் அருட்கடலின் அலைகள் குறைவுறுமோ குறைவுறாதன்றோ.

இதுகாறுங் கூறியவாற்றான் இன்ன வியலொடுபட்டதே நாடாகு மென்பதும் நாட்டின்கண் வாழுங் குடிகளை யருளொடு புரப்பவனே யரசனுவான் என்பதும் இறைவன் எனச் சிவ பெருமானுக்குப் பெயர் போந்ததே போல எல்லாவுயிர்களு மன்பாற் பதிக்கப்படுதலின் அரசற்கும் இறைவன் எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது என்பதும் அன்னோன் செங் கோன்மை செலுத்திய நாடே தமிழ்நாடாம் என்பதும் நம் நாட்டுக்குப்பொதுமொழி வேண்டுமென்பது தற்காலத்தடுக்குமா என்பதும் பிறவுங் கணிக்கப்பட்டதோடு, நாடும் குடியும் முன் னேற்ற முற்றிருந்தது, அருளான் அரசனும் அன்பாற் குடி களும் வாழ்ந்திருந்தமையான் என்பதும் அவர்கள் ஒருமொழி கொடு ஒருமொழியால் ஆட்சி புரிந்தனர் என்பதும் அவ்வொரு மொழிதானும் இறைவன் மொழியாகிய நறுந் தமிழ்மொழி யென்பதும் ஆயப்பட்டதாம்.

இடைப்பட்டகாலத்தில் நாட்டின்நிலைமை யெங்ஙனங்குன்றியது? ஆயிரம் விளையுட்டாக காவிரி புரக்கு நன்னுடாம் நஞ்செந் தமிழ்நாட்டில் ஆரியர்கள்குடிபுகுந்து நந்நாட்டுமன்னருடன் மகட் கொடைசெய்து, அரசியல் அலுவல் பார்ப்பதின் ஆற்றன்மீக் கூர்ந்தோராயினர். நம்மவரைப் புறக்கணிப்பப் புறங்கூறி இவ் வாரியர்களே யமைச்சுத்தொழில் பூண்டும் புரோகிதத்தொழில் பூண்டும், பல்வகைச் சடங்குகளை வகைப்படுத்தியும் நால்வகைச் சாதியினை நாட்டில் சட்ட முதலாக (பூர்வமாக), நாட்டியும், நாட்டினைப் பல்வகையிலும் பின்னேற்றமடையுமாச் செய்யலாயினர்,

பல்வகைக் கொள்கையும் (மதமும்) பல்வகைமொழியும், பல்வகையரசியலும், ஒருவகையினருக் கொருநீதி (முறைமை) யும் பிறவும் கூத்தாடக் குழுமின. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்ற குறட் கருத்தும் மறுக்கப்பட்டுச் சாதிப்பூசல் சமயப்பூசல் முதலியன தலைவிரித்தாடத் தொடங்கின.

நந்நாட்டார் பொருள்களை, அகம் புறம், அறம் மறம், மேல் கீழ், உயர்வு இழிவு, இன்னிலை, துறவுநிலை, முதலியவாக இவ்விரண்டாகப் பகுத்துள்ளனர். அறம், பொருள், இன்பம், வீடு என நாற்பொருளாகவும் விரித்தனர். இதனையே ஆரியர், தருமம், அருத்தம், காமம், மோக்கம் என மொழிபெயர்த்துக் கொண்டனர். இதனை நன்குணர்ந்த ஒரு ஐபங்காரடிகள் நாற்பொருளையே தமிழர் இரண்டாகத் தொகுத்துக் கொண்டனர் என முகவுரையில் முடிவு கட்டுகின்றனர். திருக்கோவையாசிலேயே கைவைத்தவராயிற்றே, இதனிடை ஏன் கைவைக்க மாட்டார். இவர்க்குப் பெருமை வருவதெல்லாம் தமிழ்மொழியினால்; வண்டோச்சி மருங்கணைதல் என்னுந்துறை நாகரீகமாகவின்று, குமார சம்பவத்து, உதட்டினைக் கனியென்று கருதி வந்தின்னல் விளைக்கும் வண்டினைக் கடிவாரிலையோவெனக் கலங்கிய காரிகையைக் காப்பாற்றும்பொருட்டு வந்த கட்டழகன் செய்தி எவ்வளவு நாகரீகமா யிருக்கின்றதென மேடைகளில் கலைவிசேடத்தினைக் காட்டுகின்றார். தமிழ்மொழியாளரே இதனையாய்ந்து முடிவுகட்டிக் கொள்வார்களாக. உண்பது, உடுப்பது, உறைவது, உறுபுகழ் உறுவது தமிழ்மொழியாலன்றே, அங்ஙனமாகவும் உண்மையினை யுண்மையாக வுன்னி யுரைக்கலாகாதா!

உளம், உரை, உடல் நோவுறுமா? முப்பத்திரண்டுறுப்புக் களுடன் பொருந்திய தக்கவின்ன தகாதனவின்னவென் றெக்கவுன்னு மறிவுடைய மக்கட்பிறப்பினர்க்கு இன்றியமையாதன நல்லகாற்று, நல்லநீர், நல்லவுணவு இம்மூன்றுமேயாம். இவை நந்தமிழ்நாட்டிலே இயற்கையிலமைந்துள்ளனவே; இம்மக்கட் பிறப்பினர்க்குரிய நலமுமிரண்டேயாம். அவை உயிர் நலமும் உடனலமுமாம். அகப்பொருள், புறப்பொருள் எனுமிரண்டுமே யிதற்குரித்தாம். "வளம்பட வேண்டாதார் யார், யாருமில்லையன்றே!" வளம்பட்ட நாட்டின்கண் வளமுண்டு; கல்வி முதலியன பிறவுமுண்டு.

நந்நாட்டினை நானிலத்தைந்திணை வளங்கண்டு முதல் கருவுரிப் பொருளெனப் பகுத்து முறை தெரித்தோதினர். இம்

முறை யெம்மொழியிலுங் கிடையாதே; இதனைக் கண்டவர்கள் முதன்முதலில் தமிழரா? பிறரா? இன்றமிழ் நாட்டிற் பிறந்த மக்கள் என்றும் இனிமையான சொல்லும் பணிவும் அன்பும் வந்தவர்க் காதரிப்பும் உடைமையானே வந்த பிறநாட்டு மக்கட் காவன வுதவினர். இதனால்வளங்கண்டு வந்தவர் நந்நாட்டவரைப் பணியாளராக்கிக் கொண்டனர். நாங்கூர் வேளிடை சோழ நாட்டுக் கரிகாற்சோழன் மகட்கொடை பூண்டனன்; இவன் வழி வந்தவரே, பின்னர், பிறநாட்டு மகளிரை மணப்பதாயினர். வேளிராகிய குறுநில மன்னரும் பெருநில மன்னருமே கொண்டு கொடுத்துக் கொண்டிருந்தனர். பிழைக்க வந்தவரிடை மண முதலியன புரிந்துகொண்ட காரணத்தானே நம்நாட்டு மன்னர் கள் பிழைபட்டு வழிதப்பி யரசியலைத் துறக்குந் துறவிகளாய் வீட்டினை யெய்தினர் போலும்.

ஆரியர்களொடு கலந்தூணுண்ணு முறையினையு மேற்கொண் டனர். வேள்வி வேட்கு முறையினை விழைந்தனர். இங்ஙனம் மேற்கொண்டன பலவாம்.

தொண்டர் வரலாறுகளைத் தூயநெறியில் விளக்கிவருகின்ற பெரியபுராணம் நம் தமிழ்நாட்டு வரலாற்று நூலுள் தலையாய தன்றோ! அதனிடைச் சேக்கிழார் பெருமகன் வேளாண்குடி யினையைச் சூத்திரவகுப்பினர் எனச் சாற்றுகின்றனரே? இஃது சாலுமா? இஃதெங்ஙனம் நம்நாட்டில் நாட்டப்பட்டதென் பதனை யாய்தல் வேண்டும். இடைப்பட்ட கால வரசியலில் ஆரியர் நாட்டிய நால்வகைச் சாதிப் பிரிவு தலைதூக்கிய காலம். இப்பகுப்பினைக் கொண்டே யொழுகல் வேண்டுமென வரசிய லொடு கலந்து சட்டஞ் செய்துகொண்ட காலம்; சமயாசாரியப் பெருந்தகையாளர்களே அச்சட்டத்தினைக் கடந்திலரே! அச் சட்டத்தினை யெவ்வாற்ற லுற்றவரும் மீறுதபடிச் செய்து கொண்டனர். அச்சொற்குக் காணும் இழிபொருளையவர் உணர்ந் திலர் எனக் கூறமுடியாது. அவ்வளவு இழிபொருள்படக் கூடிய வகையினரா பாரிவேள், வையாவிக் கோப் பெரும் பேகன் முதலானோர். நாங்கூர் வேளிடைக் கரிகால்வளவன் மகட்கொடை செய்திருப்பானா? பழையனூர் நீலியொருத்தியின் பொருட்டுத் தொண்டைநாட்டெழுபதுகுடி வேளாண்மாந்தரும் எழுநாவிடை யிழிந்தனரே? என்னே வரசியல் இடைப்பட்ட காலத்தினிகழ்ந் தது. புராணங்கள் மலிந்தன. நாடுநகரச் சிறப்புக்களில் விதிகள் (இருத்தற் குரியரிவரென) வகுக்கப்பட்டுள்ளன. இவற்றினைப் பார்க்கும்போது உளம்உரை உடல் பதைக்காமலிருக்குமா? நங்

தமிழ்நாட்டில் முதன் முதலாத் தோன்றிய திருக்குறள், பெரிய புராணம், திருவிளையாடல் முதலியவற்றினையும் வடமொழியில் பெயர்த்து வைத்துக்கொண்டு பெயர் பொறித்துள்ளார்களே! சுநீதிகுசுமமாலை, உபமன்னியபத்த விலாசம், ஆலாசியமான்மியம் இங்ஙனமாகப்பொருளளவாகவா கூறப்பட்டன? இன்றே. தொல்காப்பியமும் வடமொழியினூலிலிருந்து வந்ததெனவாய்கூசாதுரைக்கின்றனரே, நம் நாட்டில் நம்மொழியில் இவைகள் ஏன் தோன்றின.

நம் நாட்டில் முற்காலத்தில் வாழ்ந்திருந்த ஆண், பெண், எனு மிருதிறத்தினரும் எங்ஙன மிருந்தனரெனச் சிறிதாராய்குதும். கம்பநாடர்

> " பந்தினை யிளையவர் பயிலிடம் மயிலூர்
> கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
> சந்தன வனமல சண்பக வனமாம்
> நந்தன வனமல நறைவிரி புறவம் "

என நாட்டின் சிறப்பினைப்பற்றிக் கூறியுள்ளார். இதன்பொருளை யுற்றுநோக்கல்வேண்டும். உயரிய (சாமுத்திரிக விலக்கணம்.) வியலொடுற்ற மகளிர்கள் சந்தனமரக் காவின்கண் அமர்ந்து பந்தாடுகின்றனர். இயற்கையில் சந்தன மரக்காவினின்று சந்தன மணமே வீசிக்கொண்டிரா நிற்கும். அவ்வியற்கையாய நறு நாற்றத்தை அங்குப் பந்தாடுமிள மகளிர்களுடைய உயிர்ப்பினும் கூந்தலினும் தோன்றுகின்ற இயற்கை மணமீக் கூர்ந்து போக்கி அம்மரக்காவினுக்கு, செயற்கையாக சண்பக மணமுண்டென்று கருதலாம்வண்ணஞ்செய்தது என்று பொருள்படுகின்றது. இதனால் அக்காரிகையாருடைய கற்பின் பொற்பினை யெங்ஙன மெடுத்தியம்பல் கூடும். நாட்டுமகளிர் நல்லியலும் நல்லெழிலும் கற்பும் வாய்க்கப் பெற்றிருப்பதுவே நாட்டிற்குச் சிறந்த வணியாகுமன்றோ! ஆணிளைஞர் உளக்குற்றத்தை யோட்டுங்காரணத்தால்ஆசிரியரெனப்பட்டாரிடத்து மாண்பினை யாக்கிக் கொள்ளும் மாணாக்கர்நிலையில் நந்தனவனத்திலுறைந்து கல்வி கற்கின்றனர். ஆசிரியரும் மாணாக்கரும் கற்கப்படுவதும் கற்பதும் ஆய செயல்களை நந்தனவனத்தின்கண் புரிகின்றனர்.

> " கல்வி கரையில கற்பவர் நாள்சில
> மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
> ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழிய
> பாலுண் குருகிற் றெரிந்து"

என்ற முறையினை மேற்கொடு ஆவினைப் புரைய நற்பொருளை யாய்கின்றனர். கற்பவராய மாணவர், ஆவினையொத்த முயற்சி யிருப்பதால் செயற்கையில் நந்தனவனம் முல்லையம்புறவமாகத் திரிந்தது. இயற்கையில் நந்தனவனமே யாம். உயரியமுறை உயரிய கலைநூற்பொருளை யுளங்கொள வோதியுறைகின்றனர் என்பதும் புலனுகின்றது. இவற்ருல், இருபாலினரும் அற்புங் கற்பு நிறைந்து கல்வி கேள்விகளில் வல்லுநராய் வாழ்ந்திருந் தார்களென்பது துணியப்படும். கம்பர் வடநாட்டினைப்பற்றிக் கழறினுரேயன்றித் தமிழ் நாட்டினைப்பற்றிக் கூறினுரில்லை யெனவும் உயர்வு நவிற்சியாய் அணிபற்றிக் கூறினரெனவும் கூற முற்படலாம். நாம் முதன்முதலில் கங்கைக்கரை நாடுகளும் பிறவும் தமிழ் நாடென்ருேம். கம்பன், பிறந்த தமிழ்நாட்டு வளத்தைத் தான் குறித்தனனேயன்றி பிறிதில்லையென்போம். மேலும், கம்பர்,

“ ஆசலம்புரி யைம்பொறி வாளியும்
காசலம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பு நெறியின் புறஞ்செலாக்
கோசலம்பு னையாற்றணி கூறுவாம் ”

எனக் கூறிச்செல்கின்றனர். “கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு மொண்டொடி கண்ணேயுள ” எனுங் குறட்கருத் தினையொட்டிஆடவர் ஐம்பொறிவாளியும் மகளிர்தம் கண்ணெனு மைம்பொறிவாளியும் தன்றனச் குரியர்மாட்டன்றிப் பிறர்மாட் டுச்சென்று வருத்திலவெனின், இவர்தம் அற்புநெறியும் கற்பு நெறியும் என்னே ! என்னே ! இஃதிவ்வாருக நாட்டு நடைமுறை யிலிருப்ப, ஓர் ஐயங்கார் அடிகள் ஐந்திணை வளங்களையாராய் வார்போன்று நம்நாட்டு மகளிரை யிழித்துக் கூறினரே. ஒரு மகளிருடன் பலர்கூடுவது (வியபிசாரம்) என்னும் வழக்குமொழி கூடவில்லாதபோழ்து பழக்கத்திலிருக்க மாட்டாதன்றே. இம் மொழி யெங்கு யாருக்கேற்பட்டதோ அவர் தமக்கே யப்பழக்க முண்டென்பது தேற்றமாகவில்லையா ? இதுதானு தானறிந்த ஆராய்ச்சித்திறன் ! தம்மவர் பழக்க வழக்கங்களைத் தமிழர்க ளிடையா செறிப்பது. இவர் தாமா ஏமாந்த சோணகிரி. அந்தோ ! என்ன இழிவழக்காராய்ச்சிகள். (பிராயச்சித்தம்) கழுவாய் ஏற்படுத்திக்கொண்டதியார் ? வழுவினவரியார் என வாய்ந்தாலே நன்கு புலப்படுமன்றே. அன்பொடுபட்டவிறை வன் எல்லாவுயிர்களோடுங் கலந்திருக்கின்ருன். அன்னவாறே அரயனுங் கலந்திருத்தல் வேண்டும். இங்ஙனமாக விருந்த நம்

நாட்டுமன்னரையும் நாட்டுமொழியினையும் நாட்டுமக்களையுஞ் சீர் குலைத்தவர் யார்? நந்தம் தமிழ்மொழி யியல்நூல்களில் (உரை நூல்களைத் தள்ளுதல் வேண்டும்). ஐயங்கார் அடிகள் கூறுவது பொருத்தமா? தமிழர் வந்தவரை விருந்தாக்கிக் கொண்டதினலா! மக்களுக்கு மக்கள் அன்பாயிருக்க வேண்டுமென அன்பு செலுத்தியதினலா பிறவாற்ருலா ஆன்ருேர்களே ஆய்மின்! ஆய்மின்!!

## பிராட்டிக்கிராவணன் தொட்டபழியுண்டா?

திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்,
வடமொழியாசிரியர், போர்டு உயர்கலாசாலை, திருவையாறு.

மலர்தலையுலகிற் பலர்புகழ்சிறப்பின் நல்வினைமிகுந்த நம் நாவலந்திட்டிற் பாங்கறி நல்லோர், பலரும் வைகறைத் துயிலெழுந்ததும், தத்தம் நாள்வினைபாற, நவிற்றும் பல நல்லோர் திருப்பெயர்களுள், 'ஐங்கன்னியர்' பெயரும் அணிபெற அமைந்துள. அவைதாம், அகலிகை, சீதை, மண்டோதரி, தாரை, திரௌபதி என்பனவாம்.

இப்பெயருடைமடந்தையரெலாம் முதற்கட் கற்பிழந்தாராகக்கருதப்பட்டுப் பின்னர்த் தகுநல்லாராய்ச்சியாற் கற்புடையார் எனநாட்டப்பட்டதோடன்றி, மணமாகாமங்கையர்என்னும் பொருள்கொளும் 'கன்னியர்' என்னும் பெயரும்சூட்டப்பட்டனர் என்க.

மாந்தர்க்குரித்தென வகுக்கப்பட்டஒத்தியனிலை, இன்னிலை, காட்டியனிலை, துறவறநிலை என்னும் நானிலைகளுள், இன்னிலை நின்ருன் தன் அறநிலைக்கிழத்திபால் விலக்கிய நாட்களிற் கூட்டம்நிகழ்த்தா தொழுகுவனுயின் அன்னுன் ஒத்தியனிலையில் உள்ளானுகவே கருதப்பட்டு, நல்வினைமிகப்பெறுவனும் என்பது 'மனு' முதலிய அறநூலார் கொள்கையாம். அஃதேபோல், இம்மங்கை நல்லாரும் கணவரொடுகூட்டம் நிகழ்த்துவரேனும், நிகரில்தந்தனி ஒழுக்கத்துயர்வால் 'கன்னியர்' எனவே கருதப்பட்டுத்தம்மை நினைவார்க்கும் நனி நல்வினை மேம்படுக்கும் மெல்லியராயினர்.

இவ்வைவர் கன்னியரையும் பற்றி நுணுகியாராயுமுளமில்லார், பருப்பொட்டாகவே துணிந்து, கற்பிழந்தவர் எனக்கருதி முடிவும் கட்டினர். இவருள்ளும் இருவர் பழுதிலர் என்னும் முடிவும் கொண்டுளர் சிலபேர். அது 'ஐந்திற்கிரண்டுபழுதில்லை' என்னும் வழக்கால் அறியப்படும். அவ்விருவராவார்யாவர் எனத்திட்டமாக எற்குத்தெரிந்திலதேனும், அவ்வவர் ஒழுகலாறுகளைப் பாகுபாடுசெய்து பார்க்குங்கால், அவ்விருவர் சீதையும் மண்டோதரியுமாகவே யிருக்கவேண்டுமென்று ஒருவாறுபுலப்படுகின்றது.

இவ்வைவருள் சீதாபிராட்டியாரைப்பற்றி மாந்தர் கருதும் இழுக்கமெல்லாம், அவர், இராவணவிராதராற்றொடப்பட்டதும், முன்னவன் இல்லில் பத்துத்திங்கள் போல் வதிந்திருந்ததுமேயாம். இக்கூறியவை பிராட்டியார்க்கு உண்மையாகவே பழிதருவனவாமா? பழுதிலையேல் எங்ஙனம்? என்பன பிறவற்றைத் திரு வான்மீகியிராமாயணத்தையும், அதன் உரைகளையும் பற்றுக்கோடாகக்கொண்டு ஆராய்வதே, இக்கட்டுரையின் ஒருபுடை நோக்கமாகும். மேற்றலைப்பில், 'பிராட்டிக்கு' என்னும் சொல் 'இராவணன்' என்னும் சொல்லைச் சார்த்தி 'சீதா பிராட்டிக்கு' என்னும் பொருளை விளக்கி நிற்குமென்றுணர்க,

இனி, இராமபிரானும் இராவணனும் இவ்வுலகிற் பிறத்தற் கடியாவனவற்றை முன்னுணர்தல் இக்கட்டுரையின் பொருளுணர்ச்சிக்கு மிகவும் உதவிபுரியுமாதலால், முன்மொழிந்து கோடலால், அவைபற்றிச் சிறிது சுருங்கக் கூறுவல்.

பண்டு, இந்திரன் முதலிய இமையவர் வேண்டுகோளுக் கிரங்கிய திருமால் அசுரர்களை அழிவுசெய்ய முற்பட்டார். அவ் வல்லலுக்கு ஆற்றுதோடிய அவர்கள் 'பிருகு' என்னும் பெருந்துறவியாரின் அருமனைவியாரிடம் அடைக்கலம் புக்கனர். அவரும் வரும் விளைவோராது, அடைக்கலம் தந்தார். தந்த தோடன்றித் திருமால் அன்னாரைத் தடிந்தொழிக்க வந்தக்கால் வழிமறித்தலும் செய்தார். ஆகாதாரை அழித்துவிடுவதென்றே முனைந்துவந்த முனைவனும், அவ்வரிவை தன்னொடும் அசுரரை ஒரு சேரக் கொலைபுரிந்தார். மாலின் கையால் மாண்டாள் மனைவி என்பது தெரிந்த பிருகுத்துறவியார் பெரிதும்வெகுண்டு, 'மனைவியின் பிரிவால் பேதுறும் என்போலத் திருமாலும் தம்

அருந்துணைப் பிரிவால் அலமரலுறுக' என்று ஓர்* 'கடுவசை' யிசைத்தார். இசைத்தபின், ஆ! தகாத சொன்னோமென இரங்கினார். ஏனெனின், நச்செழுத்தமையப் பாவலர்பாடும் 'அறம்' என்னும் பாடலும், துறவியார் தூற்றும் வசைமொழி தானும், ஆற்றல்மங்கியமாந்தர்பால் மண்டிச்சேறலன்றி, வரம்பிலாற்ற லுரம்பெறு கடவுளர்பால் முனைந்து செல்லாவாம். அது மட்டுமேயோ! தம்மையியற்றியார் தம்மையே அரற்றச்செகுப்பவாம். எனவே, இறைவன் மேலிட்ட வசைமொழியிதுதான் மறையவனுந் தன்மேல் மறிந்து வருமாலெனும் மயங்கிய வறிவினுயங்கினர் என்க.

அக்குற்றத்திற் கேற்றதோர் கழுவாயாக, அன்னார், திருமால் திருவடி மலர்தமை நேர்ந்து, நோன்பொன்றை நோற்கலுற்றார். மகிழ்ந்தமாலவரும் மற்றவர் முன்னர்த் தோன்றி, "அஞ்சலீர் ஐயரீர், நீர் எனக்கிசைத்த வசைமொழியால் யான் வருந்துகின்றேனேவில்லை. உறுநோன்பாற்றிய உரவோர்வாய் மொழி யானே போற்றிலேனேல், மற்றியாவர்தாம் போற்றமுற்படுவார். ஆதலின், நீர் அறைந்த வசைமொழியை யான் அகமகிழ்ந்தேற்கின்றேன். வருந்தலொழிக'' என அன்புடன் கூறி யகன்றனர் போயினார்.

மனைவியைப்பிரிந்து மல்குதுயருறவேண்டுமென்னும் பிருகுவின் இவ் வசைமொழி பற்றியும், இராவ(ண்)ணன் மாந்தர் ஒழிந்த மற்றையோரால் தனக்கு இறப்பு கூடாதென நாமகள் கேள்வரின்† நல்லருள் மொழிபெற்றது பற்றியும் திருமால், இராமர்பிறப்பினை மேற்கொள நேர்ந்தார்.

இராமபிரான், திருமாலில் ஒருகூற்றாற் பிறந்தருளியவர் என்பதற்குத் திரு வான்மீகியாரிராமாயணத்திற் பெறப்படும் இடங்கள் சில காட்டுவல்.

1. ப[1]‡வான் நாராயணோ தே[2]வஸ்சதுர் பா[3]ஹூஸ் ஸநாதன:।
ராக்ஷசான் ஹந்து முத்பன்னோ ஹ்யஜய: ப்ரபு[4]ரவ்யய:॥

உத்தரகாண்டம்—சருக்கம் 8—சுலோகம் 26.

---

* கடுவசை, வசை, வைதல், கையறமொழி முதலிய ஈண்டுச் 'சாபம்' என்னும் பொருளிலாளப்படுகின்றன.

† அருள்மொழி, ஈகைமொழி என்பன 'வரம்' என்னும் பொருளில் ஆளப்படுகின்றன.

‡ எழுத்துக்களின் கீழிட்ட எண்கள் அவ்வவ் வருக்கத்து அத்துணையாவது எழுத்துக்கள் என்பதனைச் சுட்டும், எண்ணிடாதன அவ்வம் முதலெழுத்துக்களைக் குறிப்பிடுவன.

(பொருள் :—) அவுணரை அழிவுகாண்பான் பிறந்தருளிய நீவிர், வெல்லற்கரியரும், ஆளுந்தலைவரும், அழியாதவரும், முன்னைப்பழம் பொருளும், நாற்றோளுடைப் பெருமானுமாகிய திருமாலேயாவீர்.

இது இராம பிரானார் திருவோலக்கங் கொண்டினிதமர்ந் திருக்குங்கால், இராவணன் முதலோர் பிறப்புணர்த்தத்துவங்கிய குடமுனிவராம் தமிழ்த்தந்தையால், அவரை நோக்கியுரைக்கப் பட்டது.

2\. ஸ்மரத்வம் பூர்வகம் ப$^4$ாவம் மந்த்ரஞ்சாமித்ரகர்ஸன |
நக$^2$லு த்வாம் மஹாப$^3$ாஹோ ஸ்மாரயேய மனுத்தமம்|
இமம் முஹூர்த்தம் து$^3$ர்த$^4$ர்ஷஸ்மரத்வம் ஜன்ம வைஷ்ணவம்|

உத்தர. — ச.98—சு.12,13.

(பொருள்:—) பகைவரைத் தேய்க்கும் பான்மையுடையீர், பழைபதாகும் நும்விழுமிய நிலையையும், விண்ணவருடன் விளைத்த வியத்தகு சூழ்ச்சியையும் நினைவுகூர்ந்தருள்க.

பெருந்தோளிர், அடியேன் ஈடும் எடுப்புமில் இறைவராம் நுமக்கு நினைவுகூர்விக்கவல்லனே அல்லேன். கடந்தடற்கரியீர். இஞ்ஞான்று, நுமது திருமாலெனுந்தன்மையை நினைந்துபாரும்.

இவை, இராமபிரான் மீட்டும் சீதாபிராட்டியை உலகோ ரறியத் தீப்புகச் செப்பியவளவில், அப்பிராட்டியின் வேண்டு கோளால், நிலமடந்தை அவரை நிலவறையுள் இட்டுச்சென்ற ஞான்று, "இந்நிலத்தை இப்போதே அழித்தொழிப்பேன்" என வெகுண்டெழுந்தபெருமாளைப் படைப்பின் கடவுளனுகிப் பழம் பிறப்புணர்த்திய செய்தியைக் குறிப்பனவாம்.

(தொடரும்)

---

: இக்குறி, 'விஸர்க்கம்' எனப்படும். இதனை, அ, ஆ, இ, ஈ, முதலிய எழுத்துக்களின் பின் ஏற்ற பெற்றி ஹா, ஹி, ஹூ என ஒலிக்க வேண்டும். இராமஹா, ஹரிஹி, ஸம்பு$^4$ஹூ, கௌ$^3$ஹூ||

# தமிழ்ச் செய்திகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம் :— கரந்தைப் புலவர் கல்லூரி கோடை விடுமுறைக்குப் பின் 19-6-39ல் திறக்கப்பெற்றது. நுழைவு வகுப்பில் (Entrance Class) எட்டு மாணவர்களும், புலவர் முதல் வகுப்பில் பதினறு மாணவரும் சேர்ந்திருக்கின்றனர்.

இணைக்கப்படும் சங்கங்கள் :—தமிழ்மொழியின் ஆக்கத்தையும் தமிழ் மக்களின் ஆக்கத்தையும் தமது சிறந்த நோக்கமாகக் கருதிப் பணிசெய்து வரும் சங்கங்கள் ஒருங்கு சேர்ந்து புரியவேண்டிய தமிழ்த் தொண்டுகள் மிகப்பல. அவற்றை மேற்கொண்டு பணிபுரிய விரும்பும் கரந்தைத் தமிழ்ச் சங்கம், தமிழ்ச் சங்கங்கள் யாவும் தன்னுடன் இணைத்துக்கொள்ளுதல் வேண்டுமெனப் பலவாயிலாய் அறிவித்து வருகின்றது. இவ்வேண்டு கோளின்படி கீழ்க்குறித்த இரண்டு சங்கங்கள், இணைத்துக்கொள்ளுதற்கு வேண்டுகோள் அனுப்பியும் ஓர் ஆண்டிற்குரிய இணைப்புக்கட்டணம் ரூபா மூன்றை அனுப்பியும் இருக்கின்றன.

1 தில்லைத் தமிழ்க்கழகம், சிதம்பரம்.

2 விநாயகர் தமிழ்க்கழகம், மகர்நோம்புச்சாவடி தஞ்சாவூர்

நூல்கள் வெளியீடு, போன்ற பொறுப்புள்ள வேலைகளை மேற்கொள்ளு வதற்கு நூறு சங்கங்களாகிலும் இணைத்துகொண்டால் ஆண்டு ஒன்றிற்கு, ரூபா முந்நூறாகிலும் சேரும். ஐந்து ஆண்டுகளில் முடியக்கூடிய வேலைத் திட்டத்தை அமைத்துக்கொண்டு, முற்றுவிக்க முயலுதல்கூடும். இவ்வித மாக நூறு சங்கங்கள் இணைக்கப்பெறும் வரையில் சேரும் சிறு தொகை யினவாகிய சங்கங்கள் கொடுத்துவரும் இணைப்புக் கட்டணத்துக் கீடாக தமிழ்ப்பொழிலை அனுப்பி வரலாமெனவும், சங்கவெளியீடுகளாகிய, தெய் வச்சிலையாரின் தொல்காப்பியச் சொல்லதிகாரவுரை, கரந்தைக் கட்டுரை முதலிய நூல்களைச் சற்றுக்குறைந்த விலைக்குத் தரலாமெனவும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் கருதிவருகின்றனர்.

தமிழாக்கம் வளரும்துறைகளை நாடி முனைந்துநிற்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நல்லெண்ணங்கள் நிறைவேறும்பொருட்டு, தமிழ் நாட்டி லுள்ள சங்கங்கள் யாவும் ஆண்டுக்கட்டணம் ரூபா மூன்று செலுத்தி இணைத்துக்கொள்ளுதல் சிறந்த தமிழ்த் தொண்டாகும்.

திருவாளர். ச. அ. சாம்பசிவம்பிள்ளை அவர்களின் நன்கோடை:— கரந்தைத் தமிழ்ச்சங்க உறுப்பினர்களாய திரு, த. பொ. கை. அளகிரிசாமி பிள்ளையவர்களும் திரு. ச.அ. சாம்பசிவம்பிள்ளையவர்களும், சங்கப்பணிகளை இடையறாது புரிந்துவரும் மெய்யன்பர்கள். தமக்கு இன்னல் நேர்ந்துழி அவற்றால் மனமுடையாது, அவற்றைப் பொறுமையுடன் ஏற்று, 'அன்பர் பணிசெய்ய வென்னை, ஆளாக்கிவிட்டால், இன்பநிலை தானேவந்தெய்தும்'

என்ற அருண்மொழியில் உறுதி உடையராய், பரிவுடன் தொண்டு புரிகின்றனர்.

திரு. த. பொ. கை. அளகிரிசாமி பிள்ளையவர்கள் தமது அருந்தவப் புதல்வன் கயிலாயம் உலகவாழ்க்கையை நீத்தபோது மகன் பெயரால் திக்கற்றோரில்லத்தின் நலத்திற்காகரூ1250 வைப்புப்பொருளாக(Capital Fund) 1933ஆம் ஆண்டில் நன்கொடை நல்கினர். இதுபோது திரு. ச. அ. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தனது அருமை மகள் சுந்தராம்பாவின் நினைவு குறித்து மாணவர் கல்வியின் பொருட்டு வைப்புப்பொருளாக ரூபா 200ஐ 1—7—39-ஆம் நாளில் உளமுவந்து நல்கினர். இவ்விரு பெருந்தகையினரின் செல்வநிலையையும், பரந்த உளப்பாங்கினையும் அளவிட்டுப் பார்க்க இவர்கள் புரிந்த அறங்கள் ஞாலத்தின் மாணப்பெரியவாக மதிக்கப்பெறுகின்றன.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் உயஅ-வது ஆண்டுவிழா :—வருகிற ஆகஸ்டு 19, 20 நாட்களில், யாழ்ப்பாணம் பரமேசுவர கல்லூரித் தலைவர். திருவாளர், (Hon'ble.) S. நடேச பிள்ளை B.A., B.L., அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. சங்கத்தின் தொண்டுகள் பல்லாற்றிலும் விரிந்து வருவதால்அவற்றை முட்டின்றி முடிப்பதற்குப் போதிய வருவாய் இல்லாமையால் தடுமாற்ற முறுகின்றது. சங்கத்தில் நடைபெறும் திங்கட் கூட்டங்கள் ஆண்டுக் கூட்டங்களல்லாமல், உயர்தரத்தொடக்கக்கல்லூரி, புலவர்கல்லூரிகளும், மருத்துக்கூடம், திக்கற்றோரில்லம், மாணவரில்லம், நூல்நிலையம், நூல்கள்வெளியீடு, தமிழ்ப்பொழில் முதலாய பலசிறப்பட்டதொண்டுகளைச்சங்கம்மேற்கொண்டிருக்கின்றது. தமிழன்பராவார் தத்தமாலாகும் பொருளுதவியைப்புரிந்து சங்கத்தைப் புரக்க முற்படுதல்வேண்டும். அண்மையில் நடைபெறும் ஆண்டு விழாவிற்கு வந்திருந்து சங்கத்தை ஊக்கவும் வேண்டும்.

## மதிப்புரை

**தஞ்சைவாணன் கோவை :**—சிறந்த கோவை நூல்களுள் இதுவும் சிறந்தவொன்று. இவ்வரிய நூலிற்கு, குன்றத்தூர் அட்டாவதானி, சொக்கப்பநாவலர் அவர்கள் இயற்றிய உரை ஒன்று. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் 1936ல் வித்துவான் திரு. சு. சுப்பையாப் புலவரவர்களைக்கொண்டு பரிசோதித்து வெளியிட்டநூல்மற்றொன்று. வித்துவான். திரு மே. வீ. வேணுகோபாலபிள்ளை அவர்கள் நூலைப்பிழையற ஆராய்ந்து, திருத்தமும் விளக்கமுமான உரை இயற்றி உதவியுள்ளார்கள். துறைகளின் இயலை விளக்கியும், பொருணுட்பங்களைவிரித்தும்,

இலக்கணக் குறிப்புகள் எழுதியும், பொருள் முடிபுகாணுமாறு, சொற்களைக்கொண்டு கூட்டியும் உரை இயற்றியது, கற்போர்க்குச் சாலவும் பயன் தரும். நல்லதாளில் கண்கவர் வனப்புடன் வெளி வந்த இப்பதிப்பு யாவரும் விரும்பும் பெற்றியது. சென்னை 27. ஆண்டர்சன்தெரு, திரு. M. R. அப்பாத்துரை பிள்ளை B.A. அவர்களிடமிருந்து இந்நூல் விலைக்குப் பெறலாம். விலை ரூ 2.

## சுந்தரமூர்த்தி நாயனர், சேரமான் பெருமாள் நாயனர் திருநாள்

### திருவஞ்சைக்களம்

இத்திருநாள் நாளது பிரமாதி, ஆடி, 8-ம்தேதி (23-7-39) ஞாயிற்றுக்கிழமை (கொச்சி) திருவஞ்சைக்களத்தில் நடை பெறும். கொச்சி மன்னர் அவர்களது கட்டளையினுல் இவ்விழா சென்ற நான்கு ஆண்டுகளாகச் சிறப்பாகக் கொண்டாடப்படு கிறது. கோயம்புத்தூர் சேக்கிழார் திருக்கூட்டத்தார் ஆண்டு தோறும் வழக்கம்போல் தூநீராட்டு, பேரணி செய்தல், திரு வமுதுபடைப்பு, திருவிளக்கேற்றல், அடியவர் வழிபாடு முத லாய வழிபாடுகள் செய்விப்பார்கள். திருவஞ்சைக்களத் தேவார மும் சேரமானது திருமுறைகளும் ஓதப்பெறும். சேக்கிழார் தேவாரப் பள்ளிக்கூட மாணவர்களால் தேவார மோதுதலுடன் திருவீதிவலமும் புராண விரிவுரையும் நடைபெறும். அன்பர்கள் யாவரும் வந்து கண்டு இன்பமடைக.

வரும் அன்பர்கள் இது குறித்த கொச்சி அரசாங்கச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ளவேண்டும். இவ் வூர் கொச்சி அரசினர் இருப்புப்பாதையில் "இருஞாலக்குடா" என்ற நிலையத்திலிருந்து பத்துநாழிகைஅளவு 'கார்'வழியாகவும் இரண்டு நாழிகை படகிலும் சென்றால் திருவஞ்சைக்களம் துறையை அடையலாம்.

கோவை, 9-7-39. தா. ஆறுமுகம் பிள்ளை.

உ

## கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அன்பர்கள் உதவிய நன்கொடை

(பிரமாதி, வைகாசி, ஆனி)

திரு. S. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் 13 8 0
திருவையாறு

,, P. A. பொன்னுசாமி செட்டியார் ,, 1 3 0
பிறையாறு

,, K. C. இராசதுரை செட்டியார் ,, 2 6 3
பிறையாறு

,, N. மாணிக்க முதலியார் ,, 5 9 0
பனையூர்

,, A. Y. அருளானந்தசாமி நாடார் ,, 3 0 0
தஞ்சை

,, T. R. விசுவநாத பிள்ளை ,, 0 4 0
தஞ்சை

,, நீ. கந்தசாமி பிள்ளை ,, 4 8 0
பள்ளியக்கிரகாரம்

,, ச. சண்முகம் பிள்ளை ,, 1 4 0
பள்ளியக்கிரகாரம்

### வெள்ளி விழா நன்கொடை.

,, Dr. P. நடேச பிள்ளை ,, 5 0 0
சென்னை

,, S. நமச்சிவாய பிள்ளை ,, 2 0 0

,, பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியார் ,, 10 0 0
அண்ணுமலைநகர் (பேரன் காப்புக்கட்டு நினைவிற்காக)

,, சிதம்பரஞ்செட்டியார் ,, 25 0 0
நச்சாந்துப்பட்டி (புதுமனை புகுதலுக்காக)

,, ச. அ. சாம்பசிவம் பிள்ளையவர்கள் 200 0 0
(சுந்தராம்பாவின் நினைவின் வைப்புப்பொருளாக)

தமிழ்ப்பொழில் சேர்க்கை.

# சென்னை கவர்ன்மெண்ட்.

## ரெவினியு டிபார்ட் மெண்ட்.

### ரெவினியு டிபார்ட்மெண்ட்.

1939ம்-ஆு ஜூன்மீ 21உயுள்ள 547-ம் ந. விளம்பரம்.

(சென்னபட்டணம் 1939-ம்ஆுத்து 8-வது ஆக்டாகிய) புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரிவிதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும்) குறித்த 1939-ம்ஆுத்திய சென்னபட்டணத்து ஆக்டில் (ஏற்கெனவே செலாவணியாகத் தொடங்கிவிட்டிருக்கும் 1-வது பிரிவு தவிர மற்ற) சகல நிபந்தனைகளும் 1939-ம்ஆு ஆகஸ்ட்மீ முதல் தேதியன்றும் அந்தத் தேதியிலிருந்தும் சென்னை மாகாணம் முழுவதுக்கும் பிரயோகப்படவேண்டுமென்று, ஷைஆக்டின் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தைக்கொண்டு சிறப்புற்றோங்கும் சென்னைக் கவர்னரவர்கள் இதனால் களிகூர்ந்து கட்டளையிடுகிறார்கள்

சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் 63-ம் ந. அறிக்கை

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1939-ம்ஆு ஜூன்மீ 21உ.

(சென்னபட்டணம் 1939-ம்ஆுத்து 8-வது ஆக்டாகிய) புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும்) குறித்த 1939-ம்ஆுத்திய சென்னபட்டணத்து ஆக்ட் செலாவணியாகத் தொடங்குவது.

---

சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் அடியிற்கண்ட அறிக்கையானது விளம்பர மந்திரி இலாகாதாரால் வெளிவிடப்பட்டிருக்கிறது :—

---

1. புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும்) குறித்த சென்னபட்டணத்து ஆக்ட் என்னும் சட்டமானது 1939-ம்ஆு ஆகஸ்ட்மீ 1உயன்றும் அந்தத் தேதியிலிருந்தும் செலாவணியாகத் தொடங்குமென்று அறிக்கையிடப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின்படியாதொரு நபர் லைஸென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தரிடமிருந்து இதுகாரியத்துக்காகத் தாம் ஒரு லைஸென்ஸ் பெற்றிருந்தாலொழிய எந்த ரூபத்திலாகிலுமுள்ள புகையிலையை மொத்தமாய் விற்பனை செய்யவுங்கூடாது, மொத்த வியாபாரியாகவோ தயார் செய்பவராகவோ கமிஷன் ஏஜென்டாகவோ புகையிலையில் தொழில்நடத்தவுங்கூடாது. அதே மாதிரியாக, ஸிகார், சுருட்டு, ஸிகரெட், ஸிகரெட் புகையிலை, சுங்கான் புகையிலை, பீடி, பொடி முதலிய தயார் செய்யப்பட்ட புகையிலையை யாதொரு கடையிலாகிலும் தெருக்களில் விலைகூறித் திரிந்தாலாகினும் சில்லறையில் விற்பனை செய்வதற்கு ஒரு லைஸென் வேண்டியிருக்கிறது. மெல்லுவதற்கான புகையிலையைச் சில்லறையில்

விற்பனை செய்வதற்கு லைசென்ஸ் எதுவும் வேண்டியதில்லை. எந்த நபராகிலும் 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மீ 1உயன்றும் அந்தத் தேதியிலிருந்தும் யாதொரு லைசென்ஸில்லாமல் மேலே சொன்னபடி புகையிலையில் வியாபாரம் செய்தால், அவர்மேல் பிராது தொடரப்படும்.

2. வியாபாரிகள் தங்களுக்குவேண்டிய லைசென்ஸுகளுக்காக விண்ணப்பம் செய்துகொண்டு அவைகளைப் பெற்றுக்கொள்வதற்குக் கொஞ்சகாலம் பிடிக்குமாகையால், வியாபாரிகளுக்கு அசௌகரியம் நேரிடாமலிருக்கும் பொருட்டு அடியிற்கண்டவிதிகள் வெளியிடப்படுகின்றன. இந்த விதிகளை அனுசரித்து நடப்பவர்கள்மேல் லைசென்ஸில்லாமல் புகையிலையில் வியாபாரம் செய்வதற்காக பிராது தொடரப்படமாட்டாது.

3. விதிகள்:—1939-ம் வருஷம் ஆகஸ்ட் மீ 1உயன்றும் அந்தத்தேதியிலிருந்தும் எந்த ரூபத்திலாகிலுமுள்ள புகையிலையை மொத்தமாய் விற்பனை செய்யவாவது, மொத்த வியாபாரியாகவாயினும் தயார் செய்பவராகவாயினும் கமிஷன் ஏஜெண்டாகவாயினும் புகையிலையில் தொழில் நடத்தவாவது விரும்புகிறவர்கள் எல்லோரும் தாங்கள் அந்தப்படிசெய்ய உத்தேசித்திருப்பதை இதனுடன் சேர்த்துள்ள அறிவிப்பு நமூனாப்படி உடனே தெரிவிக்கவேண்டும். விண்ணப்பதாரர்கள் இந்த நமூனாவைக் கையால் எழுதித் தயாரிக்கலாம். எந்தத் தாலூகாவில் விண்ணப்பதாரர் தொழில் நடத்தும் இடம் அல்லது இடங்கள் இருக்கின்றனவோ அல்லது விலைகூறித் திரிபவர் ஒருவர் விஷயத்தில் அவர் எந்த தாலூகாவில் சாதாரணமாய் வாசஞ்செய்கிறாரோ அந்த தாலூகாவின் தாசில்தார் மேற்பார்த்து அஸிஸ்டன்ட் கமெர்ஷியல் டாக்ஸ் ஆபிஸர் என்னும் வியாபார வரி உதவி உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கவேண்டுமென்று மேல்விலாசம் எழுதி ஷெ நமூனாவை அனுப்பவேண்டும்.

4. மேற்சொன்ன அறிவிப்பைக் கொடுத்திருப்பவர்கள் எல்லோருக்கும் வியாபார வரி சம்பந்தமான சிப்பந்தியைச் சேர்ந்தவர்கள் அச்சிட்ட விண்ணப்ப நமூனாக்களைக் கொடுப்பார்கள். ஷெ விண்ணப்ப நமூனாவைக் கிரமமாய்ப்பூர்த்திசெய்து, லைசென்ஸுக்காக விதிக்கப்படத்தக்க கட்டணம் ஏதேனும் இருந்தால் அந்தக் கட்டணத்தோடுகூட, விண்ணப்ப நமூனாவைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினைந்து தினத்துக்குள் அனுப்பவேண்டுமென்று அந்த நபர்களுக்கு உத்தரவு செய்யப்படும். அறிவிப்பு விண்ணப்ப நமூனாவுக்காவது முத்திரை எதுவும் வேண்டியதில்லை.

5. எந்த நபர்களாகிலும் மேற்சொன்ன விதிகளை அனுசரித்து நடக்கத் தவறிப்போயிருந்து ஷெ சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மீ 1உயன்றும்அந்தத்தேதியிலிருந்தும் லைசென்ஸில்லாமல் புகையிலையில் வியாபாரம் செய்தால், அவர்கள்மேல் பிராது தொடரப்படுமென்று பொது ஜனங்களுக்குக் கண்டிப்பாய் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

# அனுபந்தம்.

## அறிவுப்பு நமூனு.

.................................................................................என்னும் நான்

தயார்செய்யப்பட்ட புகையிலையில் மொத்த வியாபாரம் செய்பவராக.
அல்லது

தயார்செய்யப்பட்ட புகையிலையல்லாத இதர புகையிலையில் மொத்த தயார் செய்பவராக, அல்லது

தாகராக அல்லது கமிஷன் ஏஜெண்டாக, அல்லது

சில்லறை வியாபாரியாக, அல்லது

தெருக்களில் விலைகூறித் திரிபவராக

லைஸென்ஸ் கொடுக்கப்பெற விரும்புகிறேன்.

(மேற்கண்ட பாபத்துகளில் எது பிரயோகப்படத்தக்கதா யிருக்கிறதோ அதை அமைத்துக்கொள்ளவும்)

ஒரு லைஸென்ஸுக்காக விண்ணப்பித்துக்கொள்ளவும், அதற்காக விதிக்கப்படத்தக்க கட்டணத்தை விண்ணப்ப நமூனு வந்து சேர்ந்ததிலிருந்து பதினைந்து தினத்துக்குள் செலுத்தவும், விதிக்கப்படக்கூடிய யாதொரு மொத்த விற்பனை வரியை கிரமமான தேதியில் செலுத்தவும் நான் உடன்படுகிறேன்.

நான் தொழில் நடத்தும் இடம்.................................................ல்

இருக்கிறது ; நான் சாதாரணமாய்..................................................ல்

வாசம் செய்கிறேன்.

கையொப்பம் ..........................................

பி. ஜி. ஹோல்ட்ஸ்வொர்த்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரடரி.

(A true translation)
N. VINAYAKAM PILLAI,
*Tamil Translator to Government.*

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.